www.tamilarangam.net

# களத்தில்

கரும்புலிகள் சகாப்தம்
ஆரம்பமாகியது. என்றுமே
உலகம் கண்டிராத –
எண்ணிப்பார்க்கவும்
முடியாத – தியாகப்
படையணி ஒன்று
தமிழீழத்தில் உதயமாகியது.

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

*(யூலை 5 - கரும்புலிகள் நாள்)*

திருவள்ளுவர் ஆண்டு 2028 (01.07. 1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (164) அன்பளிப்பு: 60 p

# சிறீலங்காவின் இராணுவ இயந்திரம் உடைகிறது விடுதலைப் புலிகளின் நோக்கு பெருவெற்றி

தனது இராணுவ இயந்திரத்தை தமிழீழத் தாயகமெங்கும் பலப்படுத்தி அதன் வழி தமிழர்களின் மேல் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டலாம் என்பதே சந்திரிகா அரசாங்கத்தின் நோக்காக இருந்து வருகிறது.

இதனை நன்கு இனங்கண்டு கொண்ட தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழீழ மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பேரிழப்புக்கள் ஏற்படாவண்ணம் தந்திரோபாய பின்னகர்வுகளுடன் சிறீலங்காவின் இராணுவ இயந்திரத்தை உடைத்து தமிழீழத்தையும் தமிழர்களையும் மீட்பதற்கான திட்டங்களை அவதானமான முறையில் நடைமுறைப்படுத்தத் தொடங்கினார்.

இதனை, தமது வெற்றியாக பிரச்சாரப்படுத்தி தனது சேனைகளை முன்தள்ளிய சந்திரிகா அரசாங்கம் விடுதலைப் புலிகளின் பொறிக்குள் தனது படைகளைச் சிக்க வைத்துள்ளது. இதனால், ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை எந்தத் திசையில் இருந்து எவ்வளவு ஆயுத ஆளணி பலத்துடன் ஆரம்பிக்கப்பட்டாலும் சிறீலங்காப்படை பேரிழப்புக்களைச் சந்தித்து திணறுகிறது.

பலமுனைத் தாக்குதல்களால் விடுதலைப் புலிகளை அழிக்கலாம் எனும் ரத்வத்தையின் தத்துவத்தைப் பொய்யாக்கியுள்ள விடுதலைப் புலிகள் பல முனைகள் ஊடாகவும் செலுத்தப்பட்டுள்ள சிங்களப் படைகளை அழித்தொழிப்பதிலும், சிங்களப் படைகளின் ஆயுத பலத்தைத் தமதாக்குவதிலும் பெருவெற்றி பெற்று வருகின்றனர். இதனால், சிறீலங்காவின் இராணுவ இயந்திரம் வெலவெலத்துப் போய் தானாகவே உடைந்து வருகிறது.

சிறீலங்காவின் இராணுவ இயந்திரத்தை உடைக்கும் தமது நோக்கில் விடுதலைப் புலிகள் அடைந்து வரும் பெருவெற்றிகளை மறைக்கும் நோக்கிலும், தோல்விகளை தமிழ் மக்கள் மீதான இராணுவப் பழிவாங்கலாக மாற்றி– அப்பாவி தமிழ் மக்களைக் கொன்று குவித்து– இனஅழிப்பு செய்து– அதனை விடுதலைப் புலிகளைத் தாம் அழிப்பதாக பிரச்சாரப்படுத்தி என்கிலும் தமது இராணுவத்தினருக்கும் சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கும் உற்சாகமூட்டும் தனது சர்வ தேசக்குற்றச் செயல்களை உலகின் கண்களிலிருந்து மறைக்கும் நோக்கிலும் செய்தித் தணிக்கையை சந்திரிகா அரசாங்கம் அவசரம் அவசரமாக அமுல்படுத்தியுள்ளது.

இந்தச் செய்தித் தணிக்கை– கிளிநொச்சியில் இருமுனை நகர்வாக– சிறீலங்கா ஆனிமாத ஆரம்பத்தில் தொடங்கி பரவலாக ஆனையிறவு முதல் வவனியாவரை நடாத்திய சண்டைகளில் 400 க்கு மேற்பட்ட படையினரைப் பலிகொடுத்ததையும் 2000க்கு மேற்பட்ட படையினரைக் காயங்களுக்கு உள்ளாக்கியதையும் மறைத்து விட்டதாக எதிர்க்கட்சித் தலைவரே சிறீலங்காப் பாராளுமன்றத்தில் எடுத்து விளக்கியுள்ளார்.

இதனை ஈடுசெய்யும் நோக்கில் அடுத்தடுத்து ஜயசிக்குறுய் படைகளை தரை நகர்த்தும் முயற்சிகளில் சிறீலங்கா கடந்த இரு வாரங்களாக கடும் முயற்சிகளில் இறங்கி மோசமான இழப்புக்களை தொடர்ந்து சந்தித்துள்ளது. ★



# சிறீலங்கா அரசினதும் தமிழ்குழுக்களினதும் தமிழ் மக்கள் மீதான பழிவாங்கல்கள்

இராணுவத் தோல்விகளை தமிழ் மக்கள் மீதான பழிவாங்கலாக மாற்றி சிங்களப் படைகளுக்கும் சிங்களப் பேரினவாதிகளுக்கும் உற்சாகம் ஊட்ட முயலும் சிறீலங்காவின் இனஅழிப்பு செயற்திட்டங்களினால் தமிழ் பொதுமக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் பெருகிவருகின்றன.

வன்னியிலுள்ள கோணாவில் கிராமத்தின் மீது சிங்களப் படைகள் 27 ம் திகதி சனிக்கிழமை நடாத்திய கிவ்பிர் விமானக் குண்டு வீச்சில் 7வயது குழந்தை எம். ராஜீபன், அக்குழந்தையின் தாய் எம். ஜெயலக்ஷ்மியும் (30 வயது), திருநாவுக்கரசு பராசக்தி ஆகிய மூவரும் துடிதுடித்து இறந்துள்ளனர். ஆறு தமிழ்ப் பொது மக்கள் காயமடைந்துள்ளனர்.

மாங்குளம் 24ம் திகதி புதன் கிழமை வன்னிவிழாங்குளம், அம்பலபுரம், வடகாடு பகுதியில், வாழ்விடங்கள் மீது இரவு 10.30 மணியளவில் சிறீலங்காப் படைகள் நடாத்திய மிக மோசமான ஆட்டிலறி தாக்குதல்களில் 5 பிள்ளைகளின் தாயான ஜெயராம் பாக்கியலக்ஷ்மி கொலையாகி உள்ளார்.

இதற்கு முன்னர் கடந்த 10ம் திகதி சுதந்திரபுரத்தின் மீது சிறீலங்காப்படைகள் நடாத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் 26 அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமையும் 50க்கு மேற்பட்டோர் காயமடைந்தமையும் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் அழிவுற்றமையும் வாசகர்கள் அறிந்ததே. இத்தாக்குதலின் பொழுது சிறீ சித்திவிநாயகர் ஆலயமும் குண்டு வீச்சுக்கு இலக்காகி பெரும் சேதமடைந்துள்ளது. 50,000 ரூபா உத்தேச சேத மதிப்பீடாக உள்ளது. கோயில் குருக்களான இராமலிங்க சர்மாவும் அவரது மனைவியும் காயமடைந்ததுடன் அவர்களது வீடும் சேதமாகியுள்ளது. வீட்டிற்கான உத்தேச சேத மதிப்பீடு 30,000 ரூபா எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிங்களப் படைகளால் அழிப்புக்களுக்கும் சேதங்களுக்கும் உள்ளான 1800க்கும் மேற்பட்ட தமிழர் கோவில்களின் வரிசையில் சிறீ சித்தி விநாயகர் ஆலயமும் ஒன்றாகியுள்ளது.

இவ்வாறு, சிறீலங்காவின் ஆக்கிரமிப்பு அரசினால் இனக் கொலைகளுக்கும் இன வதைகளுக்கும் உள்ளாகி துன்புறும் வன்னி வாழ் தமிழ் மக்களின் துன்பங்களை அதிகரிக்கும் வகையில் சிறீலங்காவின் துணைப் படைகளாக இயங்கும் தமிழ்க் குழுக்கள்

4ம் பக்கம் பார்க்க...

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net



ஆடி 5ம் நாள், மானிட வரலாற்றில் மகோன்னதமான – புனித தினம். பிறர் உயிர் காக்க ஆயுதமேந்திப் போராடியவர்களை கண்டு வந்த உலகு, பிறர் உயிர்க்காக தன் இன்னுயிரையே ஆயுதமாக்கும் மாமனிதர்களை – தியாக மறவர்கள் கூட்டத்தைக் காணத் தொடங்கியது இந்த ஆடி 5ல் தான்.

ஆம்! ஆடி 5ம் நாள் கரும்புலிகள் தினம். எமக்காக, உயிராயுதம் ஏந்திய உத்தமர்கள் தினம்.

இந்த் தன்னிகரற்ற உயர்ந்த உள்ளங்களைப் பற்றி தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் பின்வருமாறு கூறுகிறார்: *"மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காக தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம்; அந்தத் தெய்வீகப் பிறவிகள்தான் கரும்புலிகள்."*

ஆம்! கரும்புலிகள் தற்கொலைப் படையல்ல. ஒரு இனம் படுகொலைக்கு உள்ளாக்கப்படுவதைத் தடுக்க தம் உயிர்களையே ஆயுதமாகப் பயன்படுத்தும் தியாக சேனை. கரும்புலிகளின் தோற்றத்திற்கு காரணம்– சிறீலங்காவின் ஆயுதபலமும் ஆளணிப்பலமும் தமிழீழத்தில் இனஅழிப்புக்கு சாதகமான காரணிகளாக இருப்பதினை இல்லாதொழிக்க "தம்மையே அர்ப்பணித்தல்" என்னும் மகத்தான தியாக உணர்வே. இந்த இரண்டு காரணிகளும் அதாவது, சிறீலங்காவுக்கு ஆயுதபலமும் ஆளணிப்பலமும் தோன்றுவதற்கு சர்வதேசத்தின் நடவடிக்கைகளே காரணங்களாக அமைந்தன– அமைகின்றன.

முதலாவது நிலை: கண்மூடித்தனமான முறையில் சர்வதேச அரசாங்கங்கள்– சிறீலங்காவுக்கு ஆயுத வழங்கல்கள், விற்பனைகள், இராணுவப் பயிற்சிகளை அனுமதித்தல்– என்பவற்றில் ஈடுபட்டதனால் தோற்றம் பெற்றது–பெறுகிறது.

இரண்டாவது நிலை: காலனித்துவம் உருவாக்கிய ஆட்சிமுறைமைகளால் உருவான பெரும் பான்மையினப் பாராளுமன்ற ஆட்சி முறையினால் தோற்றம் பெற்றது. ஆனால், நவகாலனித்துவ ஆட்சியூடாக சிங்களப் பெரும்பான்மை ஆட்சியாளர்கள் தமிழீழத் தேச இனம் சிங்களத் தேச இனத்துடன் சேர்ந்து வாழ்வதற்கு உரிய அரசியலமைப்பு நிபந்தனைகளை எல்லாம் மீறி, 1972ல் இலங்கை அரசாங்கம் என்ற அந்த ஆட்சிமுறையினையே சட்டவிரோத ஆட்சியாக மாற்றி சிறீலங்கா என்ற அந்நிய அரசை நிறுவிக் கொண்டனர். தமிழீழ மக்களின் குடியொப்பம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட "தமிழீழத் தேசத்தை மீள அமைத்தல்" என்ற தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் பிரயோகத்தை ஆயுத படை ஆக்கிரமிப்பின் மூலமும் சர்வாதிகார தீர்மானங்கள் மூலமும் தடுக்கும் சிறீலங்கா, அந்நிய அரசாக



## புனித தினம்

மட்டுமல்ல ஆக்கிரமிப்பு அரசாகவும் விளங்கி, தமிழர்களை சர்வதேச சட்டங்களுக்கு விரோதமான முறையில் பகிரங்க இனஅழிப்பு செய்து வருகிறது. சர்வதேச அரசாங்கங்களும் சர்வதேச அமைப்புக்களும் தொடர்ந்தும் சிறீலங்காவை தமிழீழ மக்களதும் அரசாக அங்கீகரிப்பதினால் மோசமடையச் செய்கின்றன. சர்வதேச சமூகத்தினது அலட்சியத் தன்மையினால் – பொறுப்பற்ற தன்மையினால் இரண்டாவது நிலை தோற்றம் பெற்றது–பெறுகிறது.

ஆகவே, சிறீலங்காவுக்கான ஆயுத உதவிகள், இராணுவப் பயிற்சிகள், ஆதரவுகள், உதவி வழங்கல்கள் எல்லாமே ஒரு தேசம் தன் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்காக வழங்கப்படுவன அல்ல. தமிழீழ மக்களை பகிரங்க இனஅழிப்புச் செய்வதற்கு கொடுக்கப்படும் ஊக்கங்கள் என்பதை கரும்புலிகள் தினத்தில் உலகுக்கு இடித்துரைக்க வேண்டிய பொறுப்பு புலம்பெயர் தமிழர்களாகிய எம்முடயதே!

மேலும், கரும்புலிகளின் வீரம் இலங்கைத்தீவில் தமிழீழ மக்கள் தனியான தேசியத்தவர்களாகவே என்றும் வாழ்ந்து வருகின்றனர்–இதனைப் பேணுவதற்கு தம் உயிரையும் ஆயுதமாக்கத் தயங்கமாட்டார்கள் என்பதற்கும், சிறீலங்கா அரசாங்கம் கூறுவது போல – பன்மைச் சமுதாயமாக இலங்கைத்தீவு இல்லை என்பதற்கும் சான்றாக அமைகின்றது. கரும்புலிகள், தமிழர் பிரச்சினை இருதேச இனங்களுக்கிடையிலான பிரச்சினையாக அணுகப்பட்டாலே நியாயமான தீர்வைப் பெறும் என்ற அரசியல் யதார்த்தத்தினை சர்வதேச உலகிற்கு தமது தன்னலமற்ற வீரத்தால் விளக்கி நிற்கின்றனர்.

கரும்புலிகளின் உயிர் அர்ப்பணிப்புக்களின் திட்டமிடப்பட்ட தேவை, தமது மக்களுக்கு உயிர்–உடல் ஆபத்துக்களை விளைத்துநிற்கும் சிங்களப் படையினை விலக வைப்பதேயாகும். இந்தப் படை விலகினால் மட்டுமே எமது மக்கள் பாதுகாப்பான அமைதியுடன் வாழும் சூழ்நிலை தோன்றும். இது விரைவு பெற விடுதலைப் புலிகளின் பலம் அதிகரிக்கப்படல் வேண்டும். இதற்கு இன்றே இயலுமான எல்லாவற்றையும் செய்யவேண்டிய கடமை புலம் பெயர் தமிழர்களுக்கு உண்டு. இதனை உணர்ந்து இந்தப் புனிதமான கரும்புலிகள் தினத்தில் நாம் ஒவ்வொருவரும் உறுதி பூணுவோமாக. இதற்கான நியாயமான அழுத்தங்களை சிறீலங்கா மீது மேற்கொள்ளுமாறு நாம் வாழும் நாடுகளிலுள்ள சர்வதேச அரசாங்கங்களையும் சர்வதேச அமைப்புக்களையும் கேட்டுக் கொள்வோமாக. இப்புனித தினத்தின் மகிமையை உலகறியச் செய்வோமாக! ★

## உங்கள் தொடர்புகட்கு

| | |
|---|---|
| **AUSTRALIA**<br>TCC<br>P O Box 375<br>Preston<br>Victoria 3072 | **CANADA**<br>WTM<br>64 Eaton Avenue<br>Toronto<br>Ontario M4J 2Z5 |
| **DENMARK**<br>LTTE<br>P.O.Box 47<br>7400 Herning | **FRANCE**<br>TCC<br>341 Rue Des Pyrenees<br>75020 Paris |
| **GERMANY**<br>TCG<br>Postfach 340251<br>51624 Gummersbach. | **ITALY**<br>TCC<br>Via Mariano Stabile - 49<br>90139 Palermo |
| **NETHERLANDS**<br>TCC<br>Grt. Hertoginnelaan-106<br>2517 EL Den Hagg | **NORWAY**<br>TCC<br>P.O.BOX 1699 Vika<br>0110 Oslo |
| **SWEDEN**<br>TCC<br>Glomminge Grand-25<br>3rd Floor<br>16362 Spanga | **SWITZERLAND**<br>WTTC<br>Joses Str - 110<br>8005 Zurich |
| **UNITED KINGDOM**<br>UTO<br>Eelam House<br>202 Long Lane<br>London SE1 4QB | **U.S.A**<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L<br>Jamaica<br>New York 11432. |

## ஆயுதக் கொள்வனவு மோசடியில் பங்கு

சிறீலங்கா இராணுவ அதிகாரிகள் ஆயுத கொள்வனவில் தரகுப் பணம் பெற்றுக் கொண்டனர் என்பதை ரூபவாகினியில் இடம்பெற்ற பேட்டி ஒன்றில் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒத்துக்கொண்டுள்ளார். இதுகுறித்து அவர் அளித்துள்ள பதில் ஆயுதக் கொள்வனவில் தரகுப் பணம் பெறுவது நடைபெற்றுத்தான் இருக்கின்றது எனத் தெரிவிப்பதோடு பெரும் தொகை அளவிலும் இரகசியமாகவும் ஆயுதப் பேரங்கள் இடம்பெறுவதினால் இதற்கான சந்தர்ப்பம் எழுகின்றது என்றும் கூறியிருக்கின்றார்.

ஜனாதிபதியின் இப்பதிலானது அண்மைக் காலத்தில் போர்க்களத்தில் இராணுவத்தினர் அதிகமாகக் கொல்லப்படுவது குறித்துப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அளித்த பதிலை ஞாபகப்படுத்தும் ஒன்றாகவே உள்ளது. அதாவது, யுத்தமென்றால் இராணுவத்தினர் கொல்லப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றே என அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், சந்திரிகாவினதும் அவரது பிரதிப் பாதுகாப்பு அமைச்சினதும் பதில்கள் எந்தளவு ஏற்புடையன எந்தளவு பொறுப்பு வாய்ந்தவை. ஏனெனில், இவற்றிற்கு முழுப்பொறுப்பும் ஏற்க வேண்டியவர்கள் இவ்வாறு பேசுவது பொறுப்பைத் தட்டிக் கழிப்பது போன்றதும் விதண்டாவாதம் பேசுவது போன்றதும் ஆகும். ஒருவகையில் பார்க்கப் போனால் மூடி மறைத்துவிட எடுக்கும் முயற்சியும் ஆகும். சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஐக்கிய தேசியக் கட்சியின் மீது வைத்த முக்கிய குற்றச்சாட்டுக்களில் ஒன்று ஊழல் மோசடி ஆகும். அதிலும் குறிப்பாக ஆயுதக் கொள்வனவு விடயத்தில் ஊழல் மோசடி வலுவடைந்து விட்டது எனவும், இராணுவ உயர் அதிகாரிகள் பெருமளவிலான தரகுப் பணம் பெற்று மோசடிகளில் பலமாக ஈடுபட்டுள்ளனர் என்பதுமேயாகும். அத்தோடு தாம் ஆட்சிக்கு வந்தால் இவ்வாறான மோசடிகள் முற்றாக ஒழிக்கப்படும் எனவும் ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வாக்களித்தனர். இதன் பின்னர் தரகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் முயற்சிகள் கூட தொடக்கப்பட்டன. ஆனால், உண்மையில் அரசாங்கம் மேற்கொண்ட இந் நடவடிக்கைகள் பயனில்லாத நடவடிக்கையாகவும், பிரச்சார நடவடிக்கையாகவுமே இருந்தது. உண்மையில் மோசடிகளை ஒழிப்பதையோ அதனை இல்லாது செய்வதையோ நோக்கமாகக் கொண்டிருக்க வில்லை. அவ்வாறு இருந்திருப்பின் இன்று இடம்பெறும் ஊழல் மோசடி குறித்து அரசாங்கம் பதிலளிக்க வேண்டி இருக்கமாட்டாது.

இதைத் தவிர ஆட்சி அதிகாரத்துக்கு வரும்பொழுதே ஆயுத விபரத்தில் ஊழல் மோசடி இருக்கின்றது என்று தெரிந்து இருந்தும், ஊழல் மோசடிகள் மலிந்துள்ளன எனத் தெரிந்தும் மூன்றரை வருடத்தின் பின் தற்போது ஊழல் மோசடிகள் உள்ளன என வர்ணிப்பதும், ஒப்புதல் வாக்குமூலம் பதிலளிப்பதும் அதற்கு கற்பிக்க முயல்வதும் தமது பொறுப்புக்களில் இவர்கள் அக்கறை இன்றிச் செயல்பட்டார்கள் என்றும் ஊழல் மோசடிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்றும் கூறுவது தவறானதாக இருக்கமாட்டாது.

இதேவேளை பெரிய தொகை, இரகசிய பேரங்கள் என்ற ரீதியிலே

தொடர்ச்சி 10 ம் பக்கம்....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தலைவரின் விசேட செய்தியும் வன்னிக்களத்தின் இராணுவ யதார்த்தமும்

**"ஜயசிக்குறுய்" ஓராண்டு பூர்த்தியானதை அடுத்து வெளியான விடுதலைப் புலிகள் பத்திரிகையின் "ஜயசிக்குறுய் சிறப்பிதழ்" இல் வெளியான ஆசிரியர் தலையங்கம்.**

'ஜயசிக்குறுய்' சமரின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் வெளியிட்டிருந்த சிறப்புச் செய்தி, சமரின் இராணுவ – அரசியல் நோக்கங்களை தெளிவுபடுத்துவதுடன் – இந்த ஒருவருடச் சமரில் புலிப்படை சாதித்துள்ள இராணுவ சாதனைகளையும் விளக்கியுள்ளது.

டாங்கிகள்–பீரங்கிகள்–கனரக ஆயுதங்களுடன் படையெடுத்துள்ள முப்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்களக் காலாட்படையினரை எதிர்த்து – கடந்த ஒருவருடகாலமாக, புலிவீரர்கள் காட்டிவரும் போர்த்திறனை –தலைவர் பெருமை பொங்க எடுத்துக் கூறியுள்ளார்.

ஆட்பலத்தில் மட்டுமல்ல, ஆயுத பலத்திலும் இருபகுதிப் படைகளுக்கும் இடையே இருக்கின்ற சமச்சீரின்மையை வெளிப்படையாகவே சுட்டிக் காட்டிய தலைவர் அவர்கள், இந்த சமச்சீரற்ற நிலையிலும் புலிவீரர் புலப்படுத்தும் போர்த்திறனைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

இதேவேளை, சிங்கள அரசின் பொருண்மியத் தடைகளினால் ஏற்பட்டுள்ள வாழ்வியல் இடர்களுக்கு மத்தியிலும், களத்தில் நிற்கும் போராளிகளுக்கு உணவூட்டுவதில் உதவும் எம் மக்களினது பணிக்கு உளப்பூர்வமாக நன்றி தெரிவித்துள்ளார். அத்துடன், சண்டைப் பணிகளுக்கென களப்பகுதியில் பதுங்கு அகழிகளை வெட்டிக் கொடுத்து – உதவும் எமது மக்களது துணிச்சலான போராட்டப் பங்களிப்பையும் தலைவர் வியந்து போற்றியுள்ளார்.

தனித்த ஒரு இலக்கைக் கொண்ட சமராகவே 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையைக் காட்ட சிங்களம் விரும்புகின்றது. "மக்களது பிரயாணப் பாதை திறப்பிற்காக" என்று பாசாங்கு செய்து மக்கள் நன்மைக்கான ஒரு இராணுவ நடவடிக்கை போன்று உலகிற்கு காட்ட சிங்கள அரசு முனைகின்றது. ஆனால், இராணுவ ரீதியில் பல்வேறு இலக்குகளையுடைய 'ஜயசிக்குறுய்' நடவடிக்கை, நாசகார அரசியல் நோக்கங்களையும் கொண்டிருக்கின்றது. இந்த உண்மைகளை தனது செய்தியில் தலைவர் விளக்கிக் கூறியுள்ளார்.

தமிழர் தாயக சிதைப்பும் – புலி அழிப்பும் – நில ஆக்கிரமிப்பும் – என்று பல இராணுவ நோக்கங்களை வைத்திருக்கும் அதேவேளை ஜயசிக்குறுய் சமர் வெற்றியுடன் தமிழீழ விடுதலைப் போராட்டம் புதைகுழிக்குள் வைக்கப்பட்டு–தீவு முழுவதும் சிங்களத்தின் ஆதிக்கத்தினுள் வந்துவிடும் என்றும் சிங்கள அரசு நம்புகின்றது. இதனால் ஜயசிக்குறுய் சமர் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மிக விருப்புக்குரிய சமராக விளங்குகின்றது.

பேரினவாதத்தின் பண்பாட்டுச் சின்னமான தலதா மாளிகை முன்றலில் குண்டு வெடித்து இனவாதிகளைக் கோபமூட்டிய போதும், அதன் பாதுகாப்பின்மைக்கு பொறுப்பேற்க வேண்டிய ரத்வத்தையை பேரினவாதிகள் மன்னித்தனர். ஏனெனில் பேரினவாத நலன்களுக்கு ஒட்டுமொத்தமாக முடி சூடப் போகின்ற ஜயசிக்குறுய் சமரின் சாரதியாக ரத்வத்த விளங்குவதே ஆகும்.

இந்த வகையில் சமரின் இராணுவ அரசியல் நோக்கங்களை தெளிவாக இனங்கண்ட தலைவர் அவர்கள், ஜயசிக்குறுய் நடவடிக்கையை "சமர்களுக்கெல்லாம் தாய்ச் சமர்" என்று சரியாக வர்ணித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற பெரும் படையொன்றை சிங்கள அரசு ஏவிவிட்டபோது – அதன் தொடர்ச்சியாக பல படையெடுப்புக்களை சிங்களம் நிகழ்த்தப் போகின்றது என்பதனை, தலைவர் தீர்க்கதரிசனமாக கணித்து வைத்திருந்தார். எனவேதான் யாழ்ப்பாணச் சமரில் – தலைவர் அவசரம் காட்டவில்லை. வாய்ப்பான இடத்தில், வாய்ப்பான நேரத்தில் ஒரு சமரை எதிர்கொள்ள விரும்பி யாழ்பாணப் படையெடுப்பிற்கு எதிரான சமரை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடத்தினார். கிளிநொச்சிப் படையெடுப்பையும் அதேபோன்று எதிர்கொள்ளப் பணித்தார். அதே நேரம் 'எடிபலவை' எதிர் கொள்வதையே தவிர்த்தார். இந்தவகைத் தந்திரோபாயங்களால், எதிரியை தவறான வழியில் சிந்திக்கச் செய்து – அகலக்கால் வைக்க சிங்களத்திற்கு ஆசையூட்டினார். நிலம் விழுங்கி–கொழுக்கும் எதிர்பார்ப்புடனும் – தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்குடனும் 'ஜயசிக்குறு' தொடங்கியது.

Liberation Tigers Of TAMIL EELAM

புலிகளின் குரல்

வன்னி நிலத்தில் ஒரு மாபெரும் மரபுச் சமரை எதிரபார்த்து தலைவர் தயார்படுத்தலைச் செய்திருந்தார். அந்த மரபுச்சமரை எதிர்கொள்ளத் தக்கவகையில் இயக்கத்தின் படைத்துறைக் கட்டமைப்பில் தேவையான மாற்றங்களைச் செய்து– சீர்படுத்தினார். புதிய படைப்பிரிவுகளை தோற்றுவித்தார். இவற்றிற்கு ஏற்றால்போல் தந்திரோபாயங்களை வரைந்து–பயிற்சிகளை வழங்க ஏற்பாடுகள் செய்தார்.

'ரிவிரச', 'சத்ஜய', 'எடிபல' நடவடிக்கைகளின் விளைவால் புலிப்படை மரணப்படுக்கையில் கிடந்து போராடுகின்றது என்று சிங்களத் தலைமை கற்பனை பண்ணிக் கொண்டிருக்க – மறுபுறத்தில் – சிங்களப் படைகளின் இருப்பிற்கே அச்சுறுத்தலைக் கொடுக்கத்தக்க செயற்திட்டங்களில் தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது ஆற்றலையும் – நேரத்தையும் செலவிட்டுக் கொண்டிருந்தார். பீரங்கிப் படையணியைக் கட்டியெழுப்பினார். விமான எதிர்ப்பு படையணியை சீர் செய்தார். மரபுவழிச் சண்டைகளுக்காக தளபதிகளை தயார்படுத்தினார். போராளிகளுக்கு சமர்ப் பயிற்சிகளைக் கொடுத்து நெருங்கி நின்று நடைபெறும் நேரடிச் சண்டைகளுக்கு அவர்களைத் தயார் படுத்தினார். பல்வேறு போர் உத்திகளையும் சண்டைத் தந்திரங்களையும் உபயோகித்து சமரை நெறிப்படுத்தினார்.

இந்த ஓராண்டுச் சமரில், சிங்களப் படைகளின் நகர்வை மறித்துச் சமராடும் தற்காப்புத் தாக்குதல்களையும் (Defensive),

நிலைகொண்ட படையினரையும் – படைக்கல களஞ்சியங்களையும் குறிவைத்து வலிந்த தாக்குதல்களையும்(Offensive),

திடீரென நகர்ந்து– நிலைகொண்ட படையினரை விரட்டியடிப்பதற்காக முறியடிப்புத் தாக்குதல்களையும்(Counter offensive) தேவைக்கு ஏற்றவாறு – தலைவர்– ஜயசிக்குறுய் களமுனையில் உபயோகித்து வருகின்றார்.

புளியங்குள மறிப்புத் தாக்குதல்களும் – இன்றைய மாங்குள மறிப்புத் தாக்குதல்களும் தற்காப்புத் தாக்குதல்களுக்கு சிறந்த உதாரணங்களாகவும்,

அதேவேளை, தாண்டிக்குளம் – ஓமந்தை– விஞ்ஞானகுளம் பகுதிகள் மீது நிகழ்ந்த பெருந்தாக்குதல்கள் வலிந்த தாக்குதல் போர்முனைக்கு நல்ல உதாரணங்களாகவும்,

இதேபோன்று, படையினர் நிலைகொள்ள முயன்ற மன்னகுளம், புதூர்ச் சந்திப் பகுதிகளில் நடாத்தப்பட்ட தாக்குதல்கள் முறியடிப்புத் தாக்குதல் போர்முறைக்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகவும் விளங்குகின்றன.

அத்துடன், ஜயசிக்குறுய் நடவடிக்கையை பலவீனப்படுத்தும் உபாயத்துடன் ஜயசிக்குறுய் களத்திற்கு வெளியே– தலைவர் பிரபாகரன் அவர்கள் பல தந்திரோபாயத் தாக்குதல்களையும் (Tactical offensive) நடாத்தியுள்ளார். கிளிநொச்சி – பரந்தன் – ஆனையிறவு தளம்மீது நடந்த பாரிய வலிந்து தாக்குதலை இந்தவகைப் போர்முறைக்கு சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம்.

இந்தப் போர் உத்திகளாலும் புலிவீரர்களின் சண்டைத் திறன்களாலும் இன்று புலிகள் இயக்கம் புதிய பலம் பெற்று புத்துணர்ச்சியுடன் காணப்படுகின்றது.

புலிகளை அழித்து – போராட்டத்தை ஒடுக்கும் எதிர்பார்ப்புடன் சிங்களம் ஆரம்பித்த ஜயசிக்குறுய் சமர் இன்று– அதனுடைய படையமைப்பிற்கே பாரிய சேதத்தை உண்டுபண்ணுகின்ற சமராக மாறியுள்ளது.

"இந்த ஓராண்டு அக்கினிப் பிரவேசத்தில் நாம் எரிந்துபோகவில்லை. மாறாக நாம் புத்துயிர் பெற்று–புதிதாக எழுந்தோம் – பலமாக எழுந்தோம்." என்று இந்தப் புதிய யதார்த்தத்தை தலைவர் அவர்கள் மகிழ்ச்சியுடன் தமிழீழ மக்களோடு பகிர்ந்து கொண்டுள்ளார்.

இதேவேளை, ஜயசிக்குறுய் சமர் இப்போதைக்கு முடிந்துவிடப் போவதில்லை என்ற உண்மையையும், அவற் காரணங்களுடன் விளக்கியுள்ளார்.

தொடரப்போகும் இந்தச் சமரில் மேலும் ஆயிரம் – ஆயிரம் சிங்கள இளைஞர்கள் பலியாகப் போகின்றனர் என்ற அபாய அறிவிப்பையும் சிங்கள மக்களுக்கு விடுத்துள்ளார். அத்துடன் உட்புகுந்த படையை விரட்டி அடிக்கும்வரை 'ஜயசிக்குறுய்' சமர் ஓயப் போவதில்லை என சிங்கள இராணுவ வாதிகளை எச்சரித்து – புலிகளின் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிப்பதற்காக கடந்த 50 வருடகாலமாக சிங்களம் அனைத்து முயற்சிகளையும் எடுத்துவருகின்றது. இது காரணமாக சிங்களத்தின் பொருண்மியமும் சிதைந்து வருகின்றது. பல்லாயிரம் சிங்களவரும் அழிந்துள்ளனர். தமிழினத்தை அழிக்கும் நோக்குடன் நடாத்தப்படுகின்ற இந்தப் போரால் சிங்கள தேசமே அழிவுப் பாதையில் செல்கின்றது.

தமிழினத்தைப் பொறுத்தவகையில் இது ஒரு தற்காப்புப் போர். இந்தப் போரை வெல்வதன் மூலம்தான் தமிழினம் பாதுகாப்பாகவும் – நிம்மதியாகவும் – சுதந்திரமாகவும் வாழமுடியும். எனவே, இது வாழ்வதற்கான போர். இந்தப் போரின் தலைவிதியை தீர்மானிக்கும் அளவிற்கு 'ஜயசிக்குறுய்' சமர் முக்கியத்துவம் பெறுகின்றது. "ஜயசிக்குறுய்"யை தோற்கடித்து – சிங்கள அரசிற்கு ஒரு பெரிய இராணுவத் தோல்வியை பரிசளிக்க வேண்டும். அதன்மூலம் தமிழரின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு தேடுவது நடைமுறைச் சாத்தியமற்றது என்ற உண்மையை சிங்களத்திற்கு புகட்டுவோம். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






★ **18-6-98** அன்று காலை 9.45 மணியளவில் பெரும் எடுப்புடன் சிறீலங்கா இராணுவம் மூன்று முறிப்பு நோக்கி முன்னேற முயன்றனர். முன்னேற முயன்ற இப் படையினரை உக்கிரமான தாக்குதலுடன் எதிர்கொண்டனர். மோட்டார், ஆட்டிலறி தாக்குதல் உதவிகளுடனும் கிபிர், உலங்கு வானூர்திகளின் உதவியுடனும் டாங்கிகள் சகிதம் முன்னேறி வந்த படையினர் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் பெரும் இழப்பைச் சந்தித்தனர். மதியம் 1.30 மணியளவில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்ட நிலையில் சிங்களப் படை வந்த வழியே பின்வாங்கினர். இராணு வத்தினரின் மூன்று உடல்கள்" விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டன. இவ்வீரமிகு எதிர்த்தாக்கு தலில் நான்கு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இதேநாள் பிற்பகல் 2 மணிக்கு அம்பகாமம் பகுதியில் மேற் கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு முயற்சியும் விடுதலைப் புலிகளின் உக்கிரத் தாக்குதல்களால் முறியடிக்கப்பட்டது. இதன்போது ஒரு இராணுவத்தினனின் உடலும் பல ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. ஒரு போராளி இச்சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இதேநாள் திருகோணமலை மாவட்ட திரியாய் பகுதியில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவத்தினர் பயணம் செய்த உழவு இயந்திரம் ஒன்று சிக்கிச் சிதறியது. இச்சம்பவம் மதியம் 12.40 மணியளவில் நடைபெற்றது. இதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

★ **20-6-98** அன்று நடைபெற்ற மோதலின்பின் மேலும் நான்கு இராணுவத்தினரின் உடல்களை விடுதலைப் புலிகள் கண்டெடுத்தனர். இந்நான்கு உடல்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் கையளிக்கப்பட்டன.

இதேவேளை மூன்றுமுறிப்புப் பகுதியில் இராணுவத்தினர் பின்வாங்கி ஓடிய பகுதியில் மேலும் ஒரு இராணுவத்தினது உடல் கைப்பற்றப்பட்டது. ஒரு துப்பாக்கியும் ஒரு கைத்துப்பாக்கியும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப் பட்டன.

★ **21-6-98** அன்றும் பாரிய ஆக்கிரமிப்பு முயற்சி ஒன்றை சிங்களப் படைகள் மேற்கொண்டன. காலை 10.15 மணியளவில் மூன்றுமுறிப்பு பகுதியில் முன்னேற முயன்ற இராணுவம் விடுதலைப் புலிகளின் பாரிய தாக்குதலில் நாற்பது இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். எட்டு இராணுவ உடல்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

விடுதலைப் புலிகளின் தரப்பில் பதின்மூன்று போராளிகள் வீரச்சாவடை ந்துள்ளனர்.

★ **22-6-98** ஜெயசிக்குறு படையினர் மூன்றுமுறிப்பு பகுதியில் தாங்களாகவே புறப்பட்டு விடுதலைப் புலிகளின் பொறியில் சிக்கிக்கொண்டனர். சிங்களப்படை பெரும் இழப்புக்களுடன் பின்வாங்கிக்கொண்டது. இராணுவத் தரப்பில் கொல்லப்பட்டோர் காயப்பட்டோர் விபரம் அறியப்படவில்லை. பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகளின் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

★ **24-6-98** மட்டக்களப்பு ஆயித்தியமலை வீதியில் சிங்கள அதிரடிப் படையினருடன் செயற்படும் ராசிக் குழுவின் உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

★ **26-6-98** காலை 8.30 மணியளவில் சிறீலங்காவின் எம்.ஐ.24 பறக்கும் யுத்த டாங்கி என அழைக்கப்படும் உலங்குவானூர்தி விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியால் சுட்டு வீழ்த்தப்பட்டது. வவுனியா விமானப்படைத் தளத்திற்கு ஒரு கி.மீ. தொலைவில் புதுமுறிப்பு என்ற கிராமத்தின் மேலாக பறந்து கொண்டிருந்த போதிலேயே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனுடன் பறந்துகொண்டிருந்த இன்னொரு உலங்குவானூர்தி தப்பிச் சென்றுள்ளதாகவும், சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தில் வந்த நால்வரும் கொல்லப்பட்டனர். ★

## சிறீலங்கா அரசினதும்.........

வன்னிப் பகுதிக்கு உணவு ஏற்றிவரும் லொறிகள் மீது தாம் வசூலிக்கும் கப்பப் பணத்தின் தொகையை பெருமளவில் உயர்த்தி உள்ளனர். முன்னர் புளட் குழுவுக்கு 5000 ரூபாவும் டெலோவுக்கு 5000 ரூபாவும் ஈ.பி.ஆர்.எல்.எவ் க்கு 1000 ரூபாவும் ஒவ்வொரு லொறிகளும் வழங்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது. ஆனால், புளட் குழுவினரின் புதிய உத்தரவுப்படி ஒவ்வொரு லொறியும் 30,000 ரூபா முதல் 50,000 ரூபா வரை மூன்று குழுக்களுக்குமாகச் சேர்த்து வழங்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. சிறீலங்காவின் தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளையும் விஞ்சும் வகையில் விடுக்கப்பட்டுள்ள தமிழ்க் குழுக்களின் இப்புதிய கட்டளைக்கு அஞ்சி உணவு ஏற்றும் பல நோக்கு கூட்டுறவுச் சங்க லொறிகள் வன்னிப் பிரதேசத்திற்கு உணவேற்றி வர மறுத்து வருவதினால் வன்னிப் பிரதேசத்தில் கடும் உணவுப் பற்றாக்குறையும் பட்டினி நிலையும் மேலும் மோசமடைந்து வருகின்றது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழ்க் குழுக்கள் வவுனியாவில் உள்ள 25 தமிழர்களை பிடித்து வைத்துக் கொண்டு அவர்களை விடுதலை செய்வதானால் பெருந்தொகை பணம் தரும்படி அவர்களது குடும்பத்த வர்களை வற்புறுத்தி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன

சமீபத்தில் வன்னி உட்பட இலங்கைத்தீவின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்த ஐ.நா. வின் விசேட தூதுவர் ஒலாறி ஒட்டுனு விடம் உணவு வழங்கல்களில் இடையூறுகள் ஏற்படுத்தப்பட மாட்டாது என வாக்களித்த சிறீலங்கா அரசாங்கத்தின் தலைமையாளரான சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இது குறித்தும் , இந்தக் கப்பம் கேட்பதற்கான விதிமுறைகளை புளட் பாராளுமன்ற உறுப்பினரான தர்மலிங்கம் சித்தார்த்தனே எழுதிக் கொடுக்கும் கொடுஞ்செயல் குறித்தும் கடிதம் மூலம் பொதுமக்கள் முறைப்பாடு செய்த போதிலும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா இது குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்காமை சிறீலங்கா அரசால் திட்டமிடப்பட்ட சதிச் செயலுக்கே தமிழ்க் குழுக்கள் துணைபோகின்றன என்பதை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

இதற்கிடையே, சிறீலங்கா, தான் நடாத்தும் ஆக்கிரமிப்பு யுத்தச் செலவை சமாளிக்க அப்பாவி இடம்பெயர் தமிழ் மக்களுக்கு வழங்கி வந்த குடும்ப நிவாரணங்களை வெகுவாக குறைத்துள்ளது. இதனடிப்படையில் யாழ் மாவட்டத்துக்கான உணவு நிவாரணம் 40 சதவீதத்தாலும் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்க ளுக்கான நிவாரணம் 20 சதவீதத்தாலும் வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கான நிவாரணம் 15 சதவீதத்தாலும் வெட்டப்பட்டுள்ளது. இம்முடிவு சமாதான தேவதையாகிய சந்திரிகா பண்டாரநாயக்காவுடன் கலந்து பேசிய பின்னர் அவரது அனுமதியுடனேயே எடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

1998ம் ஆண்டுக்கான சர்வதேச மன்னிப்புச்சபையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கை, சந்திரிகா அரசாங்கத்தின் மனித உரிமை வன்முறைகளைத் தோலுரித்துக் காட்டியுள்ளது. 96 ஜூலை முதல் 97 ஜூலைக் கிடையிலான காலப்பகுதியில் கொழும்பில் மட்டும் 8652 தமிழ் மக்கள் கைதாக்கப்பட்டுள்ளதாகவும் உலக வர்த்தகமையத் தாக்குதலை அடுத்து மட்டும் 139 பெண்கள் உட்பட 965 தமிழர்கள் கைதாக்கப்பட்டதாகவும் இவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. 97ம் ஆண்டு வருட இறுதியில் அவசரகால சட்டம், பயங்கரவாத சட்டம் என்பனவற்றைப் பயன்படுத்தி 1200 தமிழர்கள் எதுவித நீதி விசாரணையும் இன்றி சிறைகளில் வாடுகின்றனர் எனவும் இவர்கள் மேல் சொல்லொணாச் சித்திரவதைகள் நடாத்தப்பட்டு வருவதாகவும் தகவல் வெளியிட்டு ள்ளது.

மனித கௌரவத்திற்கான மன்றம் பின்வரும் வகையிலான சித்திரவதைகள் சிறீலங்காவில் இடம்பெற்று வருவதாக வெளிப்படுத்தியுள்ளது.

- ஆடைகளைக் களைந்து உள்ளாடையுடன் நிற்க வைத்து கை கால்களைக் கட்டிய பின்னர் இரும்புக் கம்பி , பலகைச் சட்டம், ரப்பர் குழாய்களால் அடித்தல்
- பெற்றோலில், நனைத்த பையினால் முகத்தை மூடி, மூச்சுத் திணற வைத்தல்
- உடலின் முக்கிய உறுப்பு களுக்கு மின்சாரம் பாய்ச்சுதல்
- யாழ்குடா நாட்டு இராணுவ முகாம்களில் இடம்பெற்றுள்ள கை விரல் நகங்களைப் பிடுங்குதல்
- காயப்படுத்தி அல்லது காயப் பட்ட பகுதிகளுக்கு மிளகாய்த் தூள் தடவுதல்
- ஆண்களின் பாலியல் உறுப் பினை மேசை லாச்சிக்குள் செலுத்தி அடித்து மூடுதல்
- கையினை பூட்ஸ் காலால் நசுக்குதல்
- சிகரட்டால் உடலின் முக்கிய பகுதிகளைச் சுடுதல்
- கை-காலை கட்டி பங்கருக்குள் போட்டு கொள்ளிவாய் எறும்புகளைக் கடிக்க விடுதல்
- கைகளில் விலங்கிட்டு பெற் றோல் நனைத்த துண்டை கைகளில் சுற்றி விட்டு தீமிடுதல்
- செத்தல் மிளாய்த் தூளினை உட்சுவாசிக்கச் செய்தல்
- பெரிய பச்சை மிளகாய்களை பச்சையாக உண்ணவைத்தல்
- மலத்தில் தோய்த்த செருப்பினை நக்கும்படி செய்தல்
- பெண்கள் மேல் தனித்தும் கூட்டமாகவும் பாலியல் வன்முறைகளில் ஈடுபடுதல்
- தண்ணீருக்குள் தலையினை அமுக்கி வைத்திருத்தல்.

பயங்கரவாத தடைச்சட்டம், மற்றும் அவசரகால சட்டங்கள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டுமென ஐ.நா. சிறீலங்காவை கேட்டுள்ளது. மேலும், சிறீலங்கா அரசாங்கத்தினால் 94ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சித்திரவதைகளுக்கு எதிரான சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமெனவும் அத்தகைய மாற்றங்கள் ஐ.நா.சபையின் சித்திரவதைக்கு எதிரான அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள விவரணத்திற்கமைய மேற்கொள்ளப்பட வேண்டுமென ஐ.நா. சிறீலங்கா அரசை வற்புறுத்தியுள்ளது.

ஆனால் ஐ.நா. வால் உலகில் சித்திரவதைக்கு எதிரான தினம் என பிரகடனப்படுத்தப்பட்ட ஜூன் 26 அன்று, சிறீலங்கா இனஅழிப்பு குற்றத்திற்காக விசாரணை செய்யப்பட்டு வந்த 18 சிங்களப் பொலிசாரை விடுதலை செய்துள்ளது. இவர்கள் மாசி மாதம் 1ம் திகதி தம்பலகாமத்தில் உறவினர் வீட்டுக் கொண்டாட்டமொன்றில் கலந்து கொண்டிருந்த எட்டு தமிழ்ப் பொது மக்களை இழுத்துச் சென்று இனப்படுகொலை செய்து வீசினர்.

தொடர்ச்சி 11 ம் பக்கம்.....

www.tamilarangam.net



# சிங்களத்தின் தலைவிதி ஜெயசிக்குறுயின் கையில்!
# ஜெயசிக்குறுயின் தலைவிதியோ தலைவரின் கையில்!!

துண்டித்து தனித்து நிற்கும் வடக்கை, தெற்குடன் இணைத்து ஒரே நாடாக ஆக்குவதற்காகவே, இந்தத் தரைப்பாதை அமைப்பு. இதற்காகவே ஜெயசிக்குறுாய் இராணுவ நடவடிக்கை. இப்படித்தான் ஆரம்பத்தில் சிங்கள அரசு சொல்லிக் கொண்டது. சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரில், வடக்கை ஆக்கிரமிக்க பல கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை, முற்றுப்பெற்று, புலிகள் குடாநாட்டில் இருந்து விரட்டியடிக்கப்பட்டுவிட்டனர் ..... இனி மேற்கொண்டு, ஆக்கிரமித்த பகுதிக்கான தரைப்பாதையமைப்புடன், ஒரு பெரும் வெற்றியை அறிவித்துக்கொள்ளலாம் ...... ஐக்கிய தேசியக்கட்சி பல ஆண்டு களாகச் செய்யாத வரலாற்றுச் சாதனையை, ஆட்சிக்கு வந்த ஓரிரு வருடங்களிலேயே சாதித்துவிட்ட பெருமையை சம்பாதித்துக் கொள்ளலாம் என்பது, சந்திரிகா அம்மையாரதும் ரத்வத்தை அம்மானினதும் கூட்டான கனவு.

பதினையாயிரம் படையினருடன் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் ஜெயசிக்குறுாய் நடவடிக்கை, பெரும் இழப்புக்களையும், அவமானகரமான வரலாற்றுத் தோல்விகளையும் சுமந்து ஒரு வருடத்தைக் கடந்து நிற்கின்றது. இன்று, அதன் படைபலம் முப்பதினா யிரத்துக்கும் மேல் என சொல்லப் படுகின்றது.

குடாநாட்டில் இருந்தும், கிழக்கில்- மட்டக்களப்பில் இருந்தும் மேலதிகமாக படையினர் கொண்டுவந்து குவிக்கப பட்டுள்ளனர்.

இராணுவத்தினரை வாரித்துடைத்து இப்பெரும் சாக்களத்திற்கு அனுப்பி விட்டு, வெற்றிச்செய்தி கிடைக்கும் என்ற நப்பாசையுடன் சந்திரிகா தலைமை காத்துக்கிடக்கின்றது.

யூன் மாதத்தில் மட்டும், ஆக்கிரமிப்புக்குப் பாதை யமைக்கும் இந்த சாக்களத்தில் பல நூற்றுக்கணக்கான இராணு வத்திரை சிங்களப்படை இழந்துள்ளது. பெருந்தொகைப் படையினர் காயங்களுக்கும் படுகாயங்களுக்கும் உள்ளாகினர். பெறுமதியான பெருமளவிலான ஆயுதங்களையும் சிங்களப்படை இழந்தது. எம்.ஐ-24 உலங்கு வானூர்தியையும், இந்த மாதத்தில் சிங்களப்படை இழந்தது. சிறீலங்காவால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படா விட்டாலும், அதனது இறுதியாக கைவசம் இருந்த தனித்த தன்னியக்க உளவு விமானத் தையும் அது இந்த மாதத்தில் இழந்துவிட்டதாகவே அறிய முடிகின்றது.

இவ்வளவு பெரும் விலை கொடுத்தும், எந்த நம்பிக்கையில் இந்தச் சண்டைக் களத்தை தொடர்ந்து திறந்து வைத்திருக்கின்றது சிறீலங்கா அரசு?

அதற்கு வேறு வழியே இல்லை. முன்னுக்குச் செல்வதில் உள்ள கடுமையைவிட, இழப்பை விட, பின்னுக்கு திரும்பி வருவதில்தான் அதற்கு கூடுதல் கடுமை, கூடுதல் இழப்பு.

வேண்டுகோள்விடும் நிலையில் சிறீலங்கா அரசு உள்ளது. யாழ் குடாநாட்டை ஆக்கிரமித்து இந்த வருட ஆரம்பத்தில், உள்ளூராட்சி மன்றங்க

இராணுவ நடவடிக்கையை பூர்த்தி செய்வதாக ரத்வத்தை கொடுத்த உறுதிமொழி மீது கொண்ட நம்பிக்கையின் பேரில்தான்.



ளுக்கான தேர்தல் நடத்திய சந்திரிகா அம்மையார், சிங்களப் பகுதியில் தேர்தல் நடத்த இயலாமல் உள்ளதென

மனம் வருந்துவது வேடிக்கையானது.

அவரிடம் பென்ஸ் கார்களை அன்பளிப்பாக வாங்கிக்கொண்ட புத்தமதத் துறவிகளும் அம்மையாருக்கு ஆதரவாக அறிக்கைகள் விட்டனர். ஜெயசிக்குறுப்படையினரை மீளப் பெறுவது கூடாதெனவும், அந்த நடவடிக்கை முடிவடைந்த பின்னர் தேர்தலை வைத்துக்கொள்ளலாம் எனவும் புத்தபிக்குகள் அறிக்கை விட்டனர்.

இந்த இராணுவ நடவடிக்கை எப்போது முடிவது? தேர்தலை எப்போது வைப்பது? என, கேள்வி எழுப்பும் ரணில் விக்கிரசிங்கா, இக்கேள்வியை புத்தபிக்குகள் நோக்கி கேட்பதற்கு துணியமாட்டார்.

மாகாணசபைத் தேர்தலை பிற்போடச் சம்மதிக்கின்றேன். ஆனால் ..... 2000ஆம் ஆண்டு நடத்தப்பட வேண்டிய சனாதிபதித் தேர்தலை இந்த வருடமே நடத்த சம்மதிக்க வேண்டும் என்பது ரணிலின் புதிய நிபந்தனை.

சந்திரிகா இந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தாலும் இன்னமும் இறுதி முடிவு வெளியாகவில்லை.

இந்த வருடத்திற்குள் சனாதிபதித் தேர்தலை, ரணில் விக்கிரமசிங்கா எந்த நம்பிக்கையில் சந்திக்கத் துணிகின்றார் என்றால், ஜெயசிக்குறுாய் இராணுவ நடவடிக்கை இந்த வருடம் முன்றுப்பெறாது என்ற நம்பிக்கை யின்பேரில்தான்.

ஆக, சிறீலங்காவின் மாகாணசபைத் தேர்தல்களும், சனாதிபதித் தேர்தல்களும் ஜெயசிக்குறுாய் இராணுவ நட வடிக்கையில்தான் தொங்கிக் கொண்டி ருக்கின்றது. நாட்டின் பொருளாதாரமும் ஜெயசிக்குாய் இராணுவ நட

- சுப்பு -

வடிக்கையிலேயே தொங்கிக் கொண்டிரு க்கின்றது.

சிறீலங்காவின் அரசியல் தலை விதியும் கூடவே பொருளாதாரத் தலைவிதியும், இந்த ஜெயசிக் குறுவில் தொங்கிக் கொண்டிரு க்கின்றபோதும், இந்த ஜெய. சிக்குறுாயின் தலைவிதியோ தமிழீழத்தேசியத் தலைவர் பிரபாகர னின் கைகளிலேயே தங்கியுள்ளது. இதனைத் தீர்மானிக்கின்ற தலையாய

> அதற்கு வேறு வழியே இல்லை. முன்னுக்குச் செல்வதில் உள்ள கடுமையைவிட, இழப்பை விட, பின்னுக்கு திரும்பி வருவதில்தான் அதற்கு கூடுதல் கடுமை, கூடுதல் இழப்பு.முன்னேறிச் செல்வதில் இராணுவத்தினருக்கே பெரும் இழப்பு. ஆனால், பின்நோக்கி வந்தால் அரசிற்கு பேரிழப்பு.

குடாநாட்டில் தீவுப் பகுதிகளில் இருந்து கொண்டுவந்து குவிக்கப்பட்ட படையினருடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த மாதத்து நகர்வுகள் பெரும் தோல்வியில் முடிவடைந்துள்ளதால், மட்டக்களப்பில் இருந்தும் ஆயிரத்து ஐநூறு அளவிலான இராணுவத்தினர் ஜெய சிக்குறு களமுனைக்கு நகர்த்தப்பட்டு ள்ளனர்.

மட்டக்களப்பு நகரில், சிங்களத்தின் நலனைப் பாதுகாக்க, தலைமறைவாகி கைதுசெய்யப்பட்ட இராணுவத்தினரும், அண்மையில் படையில் இணைக் கப்பட்டு, அரைகுறைப் பயிற்சியுடன் களமிறக்கப்பட்ட இராணுவத்தினருமாக ஒரு ஆயிரம்பேர் வன்னிக்கு நகர்த்தப்பட்ட படையினரின் இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

சந்திரிகா அரசின் தற்போதைய தலையாய பிரச்சினை ....... தலைபோகும் பிரச்சினை- யாதெனில், ஜெயசிக்குறுாய் ..... ஜெயசிக்குறுாய் ...... ஜெயசிக்குறுாய் ..... அன்றி வேறொன்றுமாய் இல்லை.

வடக்கிலும் கிழக்கிலும் இருந்து

முன்னேறிச் செல்வதில் இராணு வத்தினருக்கே பெரும் இழப்பு. ஆனால், பின்நோக்கி வந்தால் அரசிற்கு பேரிழப்பு. அதனால், இராணுவத்தினரில் எத்தனை பேர் கொல்லப்பட்டாலும், பிடிவாதமாக இந்த இராணுவ நடவடிக்கையை தொடர்வதுதான் சந்திரிகா அரசின் ஆயுளைக் காப்பாற்றும்.

அதுதான் தற்போது நடந்து கொண்டிருக்கின்றது.

நான்கு மாதத்தில் முற்றாக, இராணுவ நடவடிக்கையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம், என்று ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கை, ஒரு வருடம் கடந்துள்ளபோதும், முற்றுப் பெறவு மில்லை முன்னோக்கி நகரவுமில்லை என்பதுடன், தீவின் சகல பிரச்சினை களையும் அது தன்வசப் படுத்தியிரு க்கின்றது என்பது வெளிப்பட்டு வருகின்றது.

சிறீலங்காவில் நடைபெற வேண்டியுள்ள, மாகாணசபைத் தேர்தல்களைப் பிற்போட உதவுமாறும், அதற்கு ஆதரவு தருமாறும் எதிர்க்கட்சியினர் நோக்கி

> சந்திரிகா அம்மையார், இந்தவருடம் சனாதிபதித் தேர்தலை நடத்தச் சம்மதிப்பின், அதற்கு எப்படித் துணிவார் என்றால், இந்த வருடத்துக்குள், இராணுவ நடவடிக்கையை பூர்த்தி செய்வதாக ரத்வத்தை கொடுத்த உறுதிமொழி மீது கொண்ட நம்பிக்கையின் பேரில்தான். இந்த வருடத்திற்குள் சனாதிபதித் தேர்தலை, ரணில் விக்கிரமசிங்கா எந்த நம்பிக்கையில் சந்திக்கத் துணிகின்றார் என்றால், ஜெயசிக்குறுாய் இராணுவ நடவடிக்கை இந்த வருடம் முன்றுப்பெறாது என்ற நம்பிக்கையின்பேரில்தான்.

சந்திரிகா அம்மையார், இந்தவருடம் சனாதிபதித் தேர்தலை நடத்தச் சம்மதிப்பின், அதற்கு எப்படித் துணிவார் என்றால், இந்த வருடத்துக்குள்,

சக்தி அவர்தான். சிங்களத்தின் இராணுவ அரசியல் பொருளாதார தலைவிதி அவர் கையிலேயே சிக்கியுள்ளது. ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### இது இரு கவிதைகளின் கதை.... இல்லையில்லை

# எழுத முனைந்து ஓய்ந்து விழுந்த பேனாக்கள் இரண்டின் கதை

அவர்கள் இருவரும் வெளியீட்டுப் பிரிவின் நீண்டகால உறுப்பினர்கள். பூமணி 1991 இலும், ஜெயஜோதி 1992 இலும் வெளியீட்டுப் பிரிவுக்கு வந்தவர்கள். இருவருமே கணக்கு விடயத்தில் ஆர்வமாக இருந்ததால் நிதி சார்ந்த வேலைகளுக்கே விடப்பட்டார்கள். பூமணி சுடர் வியாபார நிறுவனத்தின் நிர்வாகியாகவும், ஜோதி வெளியீட்டுப் பிரிவில் நிதிப் பொறுப்பாளராகவும் கடமையாற்றினார்கள்.

இருவருமே சரியான கலகலப்பு. இருவருக்குமே நாலு முழ நீளத்தில் வாய். ஆனால் சபை ஒன்றில் அரங்கேறுவதற்கு மட்டும் கொங்சம் கூச்சம். பூமணி ஒரு சிறந்த நிர்வாகி. வெளிப்படையாகவே கதைப்பார். ஆனால் சபையேறுதலில் 100 வீதம் பின்னடிப்பார்.

இந்தச் சபைக் கூச்சத்தை விலக்குவதற்காக பிரிவிலுள்ள போராளிகள் ஒவ்வொரு வாரமும் கவியரங்கு செய்வதென்று முடிவெடுத்தோம். ஒவ்வொரு ஞாயிறும் கொடுக்கப்படும் தலைப்பின் கீழ் கவிதை எழுதி, சற்று உயரமான படியொன்றின் மேல் ஏறி நின்று வாசிக்க வேண்டும். எல்லோருக்குமே சொல்லியாயிற்று. வந்தது ஞாயிற்றுக்கிழமை.

பூமணிக்கு இரவில் ஒழுங்காக நித்திரைகூட வரவில்லை. காலை விடிந்து ஞாயிறு வராமலிருந்தாலென்ன? என்றெல்லாம் யோசித்தார். யார் என்ன பிரார்த்தனை செய்து என்ன பலன்? விடிந்துவிட்டது. எழுத முயற்சிப்பதும், சரி வராமல் கிழிப்பதுமாக பூமணிக்கு உயிரே போவதுபோல் இருந்தது. எமது தளம் அமைந்திருந்த இடத்தில் புகையிரதப் பாதை இருந்தது. அந்தப் பாதையால் நடந்து அப்படியே நீர்கொழும்பிலிருக்கும் தன் அம்மாவிடம் மறுநாளுக்குள் போய்ச் சேர்ந்து விடுவேன் என்று அவர் மிரட்டியும் நாங்கள் அசையவில்லை.

ஜோதி உட்பட எங்கள் எல்லோருக்குமே பூமணியைப் பார்க்கச் சிரிப்பாக இருந்தது. ஈழத்து எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரையின் 'நனவிடை தோய்தல்' நூலை வாசித்துவிட்டு, "அட, இப்படியும் எழுதலாமெண்டா நானும் நிறைய எழுதுவேனே"

என்று பூமணி சொன்னதிலிருந்து, அவரை நாங்கள் இடையிடையில் "எஸ். பொ." என்றே கூப்பிடுவோம். ஏனெனில் எஸ்.பொ.வின் எழுத்து போலத் தான் பூமணியின் இயல்பான உரையாடல் இருக்கும். பூமணியின் தந்தையின் முதலெழுத்தும் எஸ். தான். எனவே இருவரின் பெயரின் சுருக்கமே எஸ்.பி. ஆக இருப்பதால்தான் எஸ்.பொ.வும் பூமணியும் ஒரேமாதிரி என்றெல்லாம் நாங்கள் கிண்டல் செய்யும் பூமணி எதையுமே வெளிப்படையாக கதைக்கும் பூமணி, தான் வழமையாகக் கதைக்கும் விடயத்தைக் கூட எழுத முடியாமல் திணறியதைப் பார்க்க எங்களுக்குப் பாவமாகத் தான் இருந்தது. ஆனால் ஆளை இப்படியே விடக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம்.

"உங்கடை எஸ்.பொ. மாதிரி ஒரு கவிதை எழுதினாக்கூட பரவாயில்லை பூமணி. நாங்கள் சிரிக்கமாட்டோம்"

என்று சொல்லிவிட்டு வந்துவிட்டோம்.

அன்றைய கவியரங்கின் தலைப்பு 'கனவு'. பூமணியின் கனவு என்னவாக இருக்கும் என்று நாங்கள் எங்களுக்குள் கதைத்துக் கொண்டோம். பூமணி தன் ஊரில் க.பொ.த. (உ.த) கணிதம் படித்தபோது வகுப்பிலுள்ள (ஆண்) மாணவர்களுக்குள், தான் மட்டும் தனியொரு மாணவியாகப் படித்ததுபற்றி, பின்னர் கொழும்பில் உயரக் குதிக்கால் செருப்புடன் (ஆள் சரியான குள்ளம்) தான் வாழ்ந்த காலம் பற்றி, கோல்பேஸ் கடற்கரையிலும், கொழும்பு மிருகக்காட்சி சாலையிலும் பொழுதைக் கழிக்கும் இளைஞர் பற்றியெல்லாம் கதை கதையாகச் சொல்லும்போதே பூமணியின் கண்களில் கனவு விரியும். இதற்குள் எதை இப்போது தன் கவிதைக் கனவில் காணுவார் என்று நாங்கள் சிரித்துக் கொண்டோம்.

அடிக் கவிதையை வாசித்து முடிக்க முன் பூமணிக்கு வியர்த்து, விறுவிறுத்து, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கி, குரல் தடுமாறி, கண்கள் கலங்கி......

"என்ன பூமணி இது??"

என்று நாங்கள் ஆறுதல் சொல்ல,

"அடுத்தமுறை நான் நல்லாச் செய்வன்"

என்று அழுகைக்கிடையில் பூமணி உறுதி எடுத்துக் கொண்டார்.

அடுத்த ஞாயிறு கவியரங்கம் "மலரும் நினைவுகள்". எல்லோருக்குமே அது இரண்டாவது அனுபவம் என்பதால் பரவாயில்லாமல் செய்தார்கள். ஜோதியின் கவிதையில் முன்னேற்றம் தெரிந்தது. பூமணி தன் கவிதையை குரலில் ஏற்ற இறக்கத்தோடு, அபிநயம் பிடித்து வாசித்த விதம் எல்லொருக்குமே உற்சாகத்தை ஏற்படுத்திவிட்டது.

"இது பூமணியின் நனவிடை தோய்தல்"

என்று பாராட்டினோம்.

தளத்திலுள்ள போராளிகள் எல்லோரையும்



காலையில் எல்லோரும் கூடினோம். ஒவ்வொருவராகக் கவிதையை வாசித்தார்கள். ஜோதி கொஞ்சம் தடுமாறினாலும் ஒருமாதிரி வாசித்து விட்டார். கடைசியாகப் பூமணி.

"நான் மேலே ஏறேல்லை. இதில் நிண்டு வாசிக்கிறன்"

என்று கெஞ்சி இருந்த இடத்திலேயே எழும்பி நின்றார். ஒரு நிமிடம் இரண்டு நிமிடம் ஐந்து நிமிடம் எல்லோரும் பூமணியின் முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்றோம். பூமணி தாளைப் பார்த்துக் கொண்டே நின்றார்.

"என்ன பூமணி? வாசியுங்கோவன்"

"என்னை ஒருதரும் பார்க்க வேண்டாம். நான் வாசிக்கமாட்டன். என்ன வாசிக்க வருகுதில்லை."

என்று சொல்ல, உடனேயே நாங்கள் எல்லோரும் நிலத்தைப் பார்க்க, பூமணி மெல்ல மெல்ல தன் கவிதையை அரங்கேற்றினார். அந்த இருபத்தொரு

விட பூமணி வயதில் மிகவும் கூடியவர். ஆனால் பூமணியின் குழந்தைத் தனமான நடவடிக்கைகளும், குழப்படிகளும் அவரின் வயதை எல்லோருக்குமே மறக்கச் செய்துவிடும். எல்லோருக்கும் பெரியவராக இருந்த தனக்கு வந்த சவாலை இரண்டாவது வாரத்திலேயே வெற்றி கொண்ட பூமணிக்கு, இந்த அனுபவம் பின்னர் பல இடங்களில் கைகொடுத்தது.

யாழ்ப்பாணத்தை சிறீலங்காப் படைகள் கைப்பற்றிய பின், எட்டு மாத காலம் தொடர்ச்சியாக வலிகாமப் பகுதியில் நின்றபோது, பல சவால்களைப் பூமணி எதிர்கொண்டார். எதிரியின் நடமாட்டத்துக்கு நடுவே நடமாடி, காட்டிக் கொடுக்க முனைவோரின் கண்களில் மண்ணைத் தூவி, மக்கள் மனங்களில் இடம்பிடித்து, கடமையைச் சரிவரச் செய்யும்வரை இருக்க வேண்டுமே என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கண்ணுறங்காமல் விழித்திருந்த காலத்தில்தான், இங்கே ஜெயசிக்குறு படையினர் மீது 1997.08.01 இல் எம்மவர்களால் நடாத்தப்பட்ட ஊடறுப்புத் தாக்குதலில் ஜோதி வீரச்சாவடைந்தார். தோழியின் வீரச்சாவுச் செய்தி யாழ். மண்ணிலிருந்து திரும்பி வந்தபின்னர் தான் பூமணிக்குத் தெரியும்.

பூமணி தன்னைப் போராளியாக இணைத்துக் கொண்டபோது, நீர்கொழும்பிலிருந்த அம்மா, எழு வருடங்களின் பின் தன் மகளைச் சந்திப்பதற்காக வந்தார். தன் வாழ்க்கையில் முதல் முதலாக அப்போது தான் பெண் போராளிகளை, அதுவும் தன் மகளையே ஒரு போராளியாக அந்தத் தாய் சந்தித்தார். தன் பாசத்தை எப்படி வெளிப் படுத்துவது என்று தெரியாமல் திணறி எங்களெல்லோருக்குமே தன் நேசத்தைத் தந்துவிட்டு, கண்ணீருடன் திரும்பிச் சென்றார்.

தான் சுகமாகப் போய்ச் சேர்ந்துவிட்டதாக அந்தத் தாயிடமிருந்து கடிதம் வந்து சேருமுன்,

"உங்கள் மகள் 1998.03.01இல் கிளிநொச்சி படைத்தளம் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்துவிட்டார்."

என்ற செய்தியை நாம் அவருக்கு அனுப்பினோம்.

*பூமணியை அரங்கத்துக்கு ஏற்றிய கவிதை:–*

### கோல்பேசின் கரைமோதும் கோலவண்ணக் கனவுகள்

வணக்கங்கள் கூறி வந்தேன் கவிபாட
பாங்காய் நான் கவி பொழிய
வந்தேன் இவ்விடம்
கவிதை என்றால் என் கவி
கேட்க உமக்குச் செவி இருக்காது
செந்தமிழுடன் பைந்தமிழும்
என் வாய் வழி வரும்
கொழும்புப் பக்கம் போக ஆசை
கோட்டை அழிக்க ஆசை
என்னென்னவோ நினைக்கிறேன்
எண்ணியதைச் செய்யத் தவிக்கிறேன்
முடியாத காரணத்தால்
மௌனமாக இருக்கின்றேன்
வண்ணமான என் கனவுகள்
உம்முன் வைக்க
ஒரு கோடி பனை ஓலை போதாது
என்ன செய்ய என்ன செய்ய?
ஒரு தாளில் வரைந்ததைக்
கூறி முடிக்கின்றேன்
வணக்கங்கள் பல கூறி
என் கனவை முடிக்கின்றேன்

*பூமணி சவாலை வென்ற கவிதை*

### 'மலரும் நினைவுகள்' எல்லாம் போச்சுதே

வந்தனங்கள் பல கூறி
கவிபாட நான் வந்தேன்.
என் கவி கேட்டு
முன் உள்ளோர் சிரிக்காதீர்!
கவி பாடும் வயதா எனக்கு?
நெஞ்சில் நிறைந்த நினைவுகளோ
ஏராளம்
ஏராளம் எனக்குண்டு
அத்தனையும் எடுத்துரைக்க
வெட்கமல்லோ வருகுதைய்யா.
என்றாலும் பரவாயில்லை
ஒரு விடயம் கூறுகின்றேன்.
லக்ஸ்பிறே மாவும் சீனியும்
சேர்த்து மிக்ஸ் பண்ணினால்
மிக்ஸரே தோற்றுவிடும்
ஒரு நாள்
லக்ஸ்பிறேயும் சீனியும்

தொடர்ச்சி 7ம் பக்கம்.....

# சந்திரிகா அரசிற்கு ஏற்பட்டுவரும் புதிய தலைவலி

சிறீலங்கா அரசிற்கு அண்மைக் காலத்தில் புதிய தலைவலியாக உருவாகியுள்ள விடயம், தென்னிலங்கையில் தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் மின்மாற்றிகள் குண்டு வைத்துத் தகர்ப்பும், தொலைத் தொடர்பு நிலையங்களில் இடம்பெற்றுவரும் குண்டுத் தாக்குதலுமாகும். இவை சிறீலங்கா அரசிற்கு பொருள் இழப்பாக மட்டுமல்ல, பொருளாதாரத்தை பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்குபவையாகவும் மாறியுள்ளன.

இவ்வாறாக குண்டுத் தாக்குதல்கள், குண்டு வெடிப்புக்கள் சராசரியாக வாரத்திற்கு இரண்டு என்ற ரீதியில் இடம்பெற்று வருகின்றன. ஆனால் இப்படி எவ்வளவு மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டுள்ளன என்பது குறித்து தகவல்கள் வெளியானதாக இல்லை. ஆனால் அது ஒரு உயர்ந்த அளவாகும். "இதுவரையில் எவ்வளவு மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டுள்ளன என தகவல்கள் வெளியிடப்பட்டால் அது மக்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கும்" என மின்சார சபை உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளதில் இருந்தே இதனை விளங்கிக் கொள்ள முடியும்.

இதேசமயம், இக்குண்டு வெடிப்புக்கள் தொடர்பாக அரசாங்கத்தினால் எதுவும் செய்ய முடியவில்லை என்றே கூறலாம். அதாவது இதனுடன் சம்பந்தப் பட்டவர்களைக் கைது செய்ய முடியாதது மட்டுமல்ல, அவர்கள் யார் எனவும் அடையாளம் காணவும் பொலிசாரால் முடியவில்லை. இதேசமயம் மின்மாற்றிகளுக்கு பாதுகாப்பு கொடுக்குமாறு விடுத்த கோரிக்கையையும் பொலிசார் மறுத்துள்ளனர். அதாவது, நாட்டிலுள்ள சகல மின்மாற்றிகளுக்கும் பாதுகாப்பை வழங்குவதற்கு ஏற்ற அளவில் பொலிசாரின் எண்ணிக்கை தம்மிடம் இல்லை எனக் கூறியே மறுத்துள்ளனர். இந்நிலையில் சிறீலங்கா அரசாங்கத்திற்கு இம் மின்மாற்றித் தகர்ப்புக்களும் தொலைத் தொடர்பு நிலையங்கள் மீதான தாக்குதல்களும் ஒருவகையில் நெருக்கடியானதாகவும் தொல்லைகள் உண்டு பண்ணுபவையாகவும் உள்ளன.

சிறீலங்காவின் இன்றைய பொருளாதாரத்தில், தொலைபேசி பரிவர்த்தனையும் மின்சாரமும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ் அடிப்படை அம்சங்களே சிறீலங்காவின் திறந்த பொருளாதாரக் கொள்கை வளர்ச்சி அடையப் பெரிதும் உறுதுணையாக இருந்துள்ளன. குறிப்பாக மலிவானதும் சீரானதுமான மின்விநியோகம் முதலீட்டாளர்களைக் கவரும் அம்சங்களில் ஒன்றாகும்.

இதேசமயம் தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையங்களில் ஏற்படும் குண்டு வெடிப்புக்கள் சிறீலங்காவின் வர்த்தக உலகத்தை பெரிதும் பாதிப்பவையாக உள்ளன. இதைத் தவிர வெளிநாட்டு முதலீட்டுகளைக் கொண்ட தனியார் மயப்படுத்தப்பட்ட இந்நிறுவனங்களில் வெடிக்கும் குண்டுகள் அந்நிய முதலீட்டாளர்களுக்கு நட்டத்தை மட்டுமல்ல, அச்சத்தை ஊட்டுபவையாகவும் மாறிவிடுகின்றன.

மறுவளமாக, தொடர்ச்சியாக இடம் பெறும் குண்டு வெடிப்புக்களினால் பல மில்லியன் ரூபாய்களுக்கு வாரா வாரம் இழப்பு ஏற்பட்டு வருகின்றது. இதுவும் ஒருவகையில் அரசாங்கத்திற்குப் பெரும் சுமையாக மாறியுள்ளது என்றே கூறலாம். இதிலும் இவ்விழப்புகளை உடன் சீர் செய்ய வேண்டியிருப்பதினால் அது ஒரு அழுத்தம் தரும் சுமையாகவே மாறியுள்ளது.

ஆனால், இக்குண்டு வெடிப்புக்கள் தனியாக பொருளாதாரத்தை மட்டும் பாதிக்கும் ஒன்றாக இல்லை. சந்திரிகா அரசாங்கத்திற்கு அரசியல் இராணுவ ரீதியிலும் அழுத்தம் கொடுப்பவையாகவும் தலைவலியைக் கொடுப்பவையாகவும் உள்ளன. அதாவது இக்குண்டு வெடிப்புக்கள் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு விடுக்கப்பட்ட சவாலாகவும் சந்திரிகா அரசாங்கத்தின் அரசியல் பிரச்சாரங்களுக்கு முட்டுக்கட்டையாகவும் மாறியுள்ளன. இருப்பினும், அரசாங்கம் இக்குண்டு வெடிப்புகளினால் ஏற்படும் பாதிப்புக்களை மூடி மறைத்துவிட முற்படுகின்றதாயினும் அது எத்தனைதூரம் சாத்தியமாகும் என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. அதிலும் மின்மாற்றிகள் மீது இடம்பெற்றுவரும் தாக்குதல் அமைச்சர் ரத்வத்தைக்கு அவமானத்தை ஏற்படுத்தும் ஒன்றாகவே மாறியுள்ளது. ஏனெனில் மின்சக்தி அமைச்சரான ரத்வத்தவே பாதுகாப்பு அமைச்சை இயக்குபவராகவும் உள்ளார். இந்த வகையில் மின்மாற்றிகள் தகர்ப்பானது அமைச்சர் ரத்வத்தவின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு விடுக்கப்பட்ட சவால் போன்றும் உள்ளன. ★

# இது இரு கவிதைகளின் கதை.... இல்லையில்லை....

வாங்கிவந்தாள் ஏன் அம்மா
வந்ததும் என் கண்ணில் படாமல்
போட்டுவிட்டாள் போத்தலுக்குள்,
போத்தலுக்குள் போட்டதும் போதாமல்
எங்கோ உயரத்தில்
ஒளித்தும் வைத்துவிட்டாள்.
ஒளித்ததை நான் தேடினேன்.
எட்டி எடுப்பதற்கு என் உயரம் போதாது.
உயரம்தான் தேவையென்று
எடுத்துவந்தேன் ஒரு ஸ்ரூலை
ஸ்ரூல் தூக்கியதுதான் தாமதம்
அகப்பையோடு ஓடி வந்தாள்
என்னருமைத் தாயவள்தான்
அதற்கிடையில் நானேறி
போத்தலைத்தான் எடுக்கையில்
டமார் என்று விழுந்தது போத்தல்
பளார் என்று விழுந்தது எனக்கு
'ஐயோ' என்று நான் ஓட
என் நாக்கும் தொங்கிடவே
நாய் ஒன்று பின்தொடர
என் நாக்கு வீணியெல்லாம்
வீணாகிப் போய்விட்டது.
இனி என்ன செய்வது?
அழுதழுது நான் போய்
போத்தல் ஓடு பொறுக்கினேன்
என் சிறு கவி கேட்ட
எனதருமை நண்பிகளே
இனி உங்கள் கவி கேட்க
போய் அமர்கின்றேன் ஆசனத்தில்

*ஜெயஜோதியின் 'கனவு'*
*அரங்கேற்றக் கவிதை*

கவிதை எழுதும் கவிக்குயில்
நான் அல்ல என்றாலும்
கவிதை இங்கு உரைக்க வேண்டும்
என்பதால் என் கவி
கட்டுரையாகவோ அன்றி
கதையாகவோதான் இருக்கும்.
கனவுகள் ஏராளம் உண்டு.
கவியாக்க முடியவில்லை என்றாலும்
சிறிதளவு எழுதுகிறேன் கேட்டிடுவீர்.
இனியதொரு தமிழீழம் கிடைத்துவிடும்
என் கனவு – அதில்
எரிந்துபோன எம் தேசமதை
சோலையாக மாற்றிவிட
வேண்டும் என்று கனவு.
மணப்பிட்டிபோல் காட்சி தரும்
வயல் எல்லாம் பசுமை படர்ந்து
காணவேண்டும்.
தாளரீங்காரம் நெல்மணியில்
கேட்கவேண்டும் என்றெல்லாம் கனவு
அழிந்துபோன தொழிற்சாலைகள்
வளமுடன் இயங்க வேண்டும்
என்று கனவு
அல்லலுறும் மக்களின் இன்முகம்
காணக் கனவு
மாண்டுபோன மக்களின்
மனமது குளிர வேண்டும்.
இன்னுயிர் ஈழத்துக்காய் நீத்த
மாவீரர் நினைவது
கோயில்மணிபோல
ஓங்கி ஒலிக்க வேண்டும்
என்றெல்லாம் கனவுகள்

*ஜெயஜோதியின்*
*'மலரும் நினைவுகள்'*

*வரிகளுக்குள் அடங்காத*
*நினைவலைகள்*

கவியரங்க மேடையிலே
கவியுரைக்க வந்திருப்போர்
அனைவருக்கும் எனதன்பு வந்தனங்கள்.
நெஞ்சத்தில் நிலைத்த நினைவுகளாம்
எப்படிக் கூறுவது என்றுதான்
பார்க்கின்றேன்.
தத்தித் தத்தி விழுந்தெழும்பிய
காலம் உண்டு – அதை
நினைவு கூர்ந்து பார்த்தாலும்
ஏராளம் வரிகளில் எழுத முடியவில்லை
ஆனாலும்,
ஒன்றிரண்டை உரைக்கின்றேன்.
தப்பேதும் இருந்துவிடின் மன்னிப்பீர்
என்றெண்ணித் தொடங்குகின்றேன்.
சிரட்டை எடுத்து மண் சோறு
விளையாடும் காலமதில்
என் தம்பியுடன் சண்டையிட்டு
அடித்துவிட்டு ஓடிப்போய்
அறையைப் பூட்டி நிற்பதுண்டு.
தப்பியோ அறைக்கு வெளியே
நின்று சொல்லுவான்.
"வெளியே வரமாட்டாள்" என்று.
ஏதோ கெஞ்சிக் கூத்தாடி
வெளியில் வந்து விடுவேன்.
பின்னர் அவனும்
சேர்ந்து விளையாடத் தொடங்குவான்
தண்டவாளத்தில் தடக்கி விழுந்து
மண்டை உடைபட்டு
அம்மாவிடம் திட்டு வாங்கியதுண்டு.
தடியுடன் அம்மா அடிக்க வந்தால்
ஒரு ரவுண்டு ஓடிவந்தால்
அம்மாவின் கோபமெல்லாம்
ஆறிவிடும்.
பக்கத்தில் இருந்து
அகப்பைக் காம்பால்
அடி வாங்கியும் உள்ளேன்.
முருங்கைக் காயாலும்
ஒருமுறை வாங்கினேன்.
அடிவிழுந்ததுதான் தாமதம்
நான் மயங்கிவிட்டேன்.
அப்பாவுக்கு அம்மாமேல் கோபம்.
விட்டார் ஒரு அடி.
அம்மா அடிக்கடி சொல்லுவார்.
"உன்னாலைதான் கொப்பரிற்றை
முதல் அடி வாங்கினேன்" என்று
இந் நினைவு என்றும் மாறுவதில்லை.
அப்பாவுக்குக் கோபம் வந்தால்
தண்டனை தருவார்.
முட்டுக் காலில் நிற்பாட்டி
கைகள் இரண்டையும் நீட்டி
கையில் கல்லும் வைத்துவிட்டுச்
சொல்லுவார்.
அல்லது போனால்
ஒரு மூலையில் இருத்திவிட்டு
தடியொன்றை புடுங்கி
பக்கத்தில் வைத்துவிட்டுப் போவார்.
இப்படித்தான் அப்பா.
ஒருபோதும் அடித்ததில்லை.
ஆனால்...
ஒருநாள் தம்பி
புதிதாய் சறம் கட்டிவந்து கேட்டான்
'வடிவா இருக்கோ' என்று
'சின்னப்பிள்ளைக்கு ஏன் சறக்கட்டு?'
என்று சறத்தைப் பிடித்து இழுத்து விட்டேன்.
இழுத்ததுதான் தாமதம்
தம்பி ஊரையே கூப்பிட்டு விட்டான்.
அப்பாவுக்கும் சொல்லி விட்டான்.
அப்பாவின் கோபத்திற்கு
அளவே இல்லாமல் போக,
கையில் இருந்த வயறால்
நல்...ல அடி.
முறையாக வாங்கினேன்.
மறக்குமா?
சப்பிக்காரன்
இந்தியனுடன் வந்து
'அண்ணை' ஒருவரை
எம் கண்முன்னே சுட்டது
அவர் துடிதுடித்துச் செத்தது
இப்பவும் என் மனம் அழும்.
ஈரெட்டு வயதினிலே
பயிற்சிப் பாசறை தேடி வந்தேன்.
பயிற்சியையும் முடித்து விட்டேன்.
மணலாற்றில் 'மின்னல்'
நாயாற்றுக் கடற்கரையில்
நேவி வரும் என்று
எமதணி காத்திருக்க,
விமானங்கள் விளையாடின விண்ணில்.
கொட்டிலுக்குள் சாப்பிட்டுக்கொண்டிருந்த
எம்மை சென்றி கூப்பிட்டது.
'புக்காரா' குண்டு போடுறான்
ஓடி வாருங்கோ என்று.
பொசிசனுக்குள் இறங்க முன்னமே
குண்டு வந்தது எனக்கு நேரே.
ஒன்றும் செய்ய முடியாமல்
அப்படியே நின்று விட்டேன்.
குண்டு விழுந்து வெடித்தது.
என் உடல் சிதறியிருக்கும் என்று
பொறுப்பாளர் ஓடி வந்தார்.
எனக்கோ
நான் உயிருடன் இல்லாதது போல் உணர்வு.
சரி.
அன்று சண்டை முடிந்தது.
யாழ் நோக்கி வந்தோம்.
கழுத்தளவு நீருக்குள்ளால்
நடந்து வந்தோம்.
துவக்கெல்லாம் நீருக்குள்ளால்
இருந்திருந்தாற்போல்
நேவி வாறான் என்று
துவக்கெல்லாம் லோட் பண்ணி
அன்லோட் பண்ணி...
சிறிது தூரம் வந்ததும்
'கரை தெரியுது'
என்றொருத்தி கத்த,
நாஜும் ஓமோம்
வெண்மணல்தான் என்ன அதிசயம்
என்று கூவ,
அருகில் போய் ஏமாந்தோம்.
செங்கால் நாரைகள் தம்
வெள்ளைவெளேரென்ற உடலுக்கு
சொண்டு மட்டும் சிவப்பாக
கால் கறுப்பாக ...
என்னால் மறக்கவே முடியவில்லை
நீருக்குள் மிதக்கும் அதன் அழகை
அது எழும்பிப் பறந்த வடிவை
என்னவொரு இன்னிசை ஒலி அதன் கீதம்
இன்றும் அது போல்
இன்னொரு இசை நான் கேட்டதில்லை
இதுபோல் எத்தனை
நீங்காத நினைவலைகள்.

*நன்றி*
*"சுதந்திரப் பறவைகள்"*

www.tamilarangam.net



யூலை 05

# தியாகத்தின் இமயத்தைத் தொட்ட இலட்சிய வீரர்கள் கரும்புலிகள் நினைவாக......

கப்டன் மில்லருடன் கரும்புலிகளின் சகாப்தம் ஆரம்பமாகியது. என்றுமே உலகம் கண்டிராத, எண்ணிப்பார்க்கவும் முடியாத, தியாகப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது.

பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம்வாய்ந்த ஆயுதமாகவே கரும்புலிகளை நான் உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள். எமது போராட்டப் பாதையின் தடைநீக்கிகள். எதிரியின் படைபலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

'கரும்புலி' என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும், உறுதிப்பாட்டிற்குமே நாம் குறிப்பிடுகிறோம். இன்னொரு அர்த்த பரிமாணத்தில் இருளையும் அது குறியீடு செய்யும். பார்வைக்குப் புலப்படாத, பூடகமான, இரகசியமான தன்மையையும் செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும். எனவே 'கரும்புலி' என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும் ஆழமான படிவமாக அமையப் பெற்றிருக்கிறது.

கரும்புலி வீரர்கள் பற்றி இன்று முழு உலகமும் பேசுகிறது. அவர்களது மகத்தான தியாகத்தைக் கண்டு மலைத்துப்போய் நிற்கிறது. பூகம்ப அதிர்வாகக் குமுறும் எமது போராட்டத்தின் உக்கிரத்தை உலக சமுதாயத்திற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகளே.

இது கரும்புலிகளின் சகாப்தம் !

இடியும் மின்னலுமாகப் புலிகள் போர்கோலம் கொண்டுவிட்ட காலம்.

இந்தப் புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும்.. சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள். புதிய சரித்திரம் படைப்பார்கள். எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள்.

*– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்.*
*(05–07–1993 அன்று தலைவர் அவர்கள் கரும்புலிகள் நினைவாக விடுத்த செய்தியிலிருந்து....)*



காற்றலையும் நிலமும்
நீள்வானும் அதிர
ஒரு கணப்பொழுதோடு
காலத்துயர் சுமந்த வாழ்வின்
பேரொளி ஒன்றுக்காய்
கரைந்துபோனவரே!
நெஞ்சத்துள் தவித்திருந்த
ஆயிரமாயிரம் நினைவலைகளினூடு
வெடித்துச் சிதறிய
தசைத்துணுக்குகளின் கதைகளில்
தாயகத்து தடையெதிர்த்த
பயணங்களில்
உணர்வின் மொழிசொல்லமுடியாத
மனிதர்களானீர்!

---

இருள் கலைத்து ஒளிபரவச்
சென்றனர் – பகை
இடிந்து வீழ வெடிசுமந்து வென்றனர்
கரும்புலிகள் எனவளர்ந்து
கொண்டனர் – எங்கள்
கண்ணிரண்டில் உயர் வடிவாய்
நின்றனர்

---

நிலத்திலும் வெல்வோம் !
கடலிலும் வெல்வோம் !
நாளை
வான் பரப்பிலும் வெல்வோம் !
*- கரும்புலிகள்*

# என்னரிய தமிழினமே எழுந்தொருக்காற் செவிதருவாய்!

5–7–1998, கரும்புலிகள் நினைவு
நாளையொட்டிய விசேட கவிதை

கருமை படிந்த தமிழனின் வாழ்விற்
கதிரொளி யாகி உதித்த புலிகளின்
பெருமை நிறைந்த போர் வரலாற்றிற்
பதிந்த வரிகளாம் கரும்புலி மறவரே!

தேசமும் தாய் மண்ணும்
தேசியமும் உயிர் வாழப்
பாசத்தைப் படிப்பைப்
பாதியிலே அடக்கி வைத்து...
ஆசைகளை யெல்லாம்
ஆழத்திற் புதைத்துவிட்டு
வீசும் காற்றோடும்
விண்ணோடும் மண்ணோடும்
மூசி எழுமலையில்
மூழ்கி நிற்கும் கடலோடும்
பேசி நடக்கின்ற
பெரியவரே யும்பாதம்
பூசிக்கும் மக்கள்
போராட்டப் பயணத்தை
நேசிக்கும் நெஞ்சோடு
நின்று கவி சொல்வேன்!

குருதிக் கடலிற் கண்ணீரில் மரணத்தின்
பிரிவிற் பிணியிற் பெருந்துயரில் நாளிரவைத்
துருவிக் கழிக்கும் எம்மக்கள் குரல் உலகின்
இருளைக் கிழித்து அநீதிக்கு முற்றுவைக்கப்
பெருகும் ஆர்வத்தாற் பிரார்த்தித்து
நந்தலைமைப்
பரிதிக்கு முத்தமிட்டுப் பாடி உளம் தணிவேன்!
உருகும் பனிப்படலம் உடைந்துவிழும்
பகைச்சடலம்
கருதியது கூடுமெனும் உறுதியுடன் கவலை
வெல்வேன்!

ஆலய முன்றலில் அமைதியாய் நின்று
ஆண்டவன் அருளினுக் கேங்கிய கூட்டமாய்
கோலமும் குறிகளும் கொண்டு தம்மயலுடன்
கூடிக் களித்துக் குலவிய மக்களைச்...
சேலையும் பூவுமாய்ச் செந்நிறப் பொட்டுடன்
சித்திரம் சிற்பமாய் உலவிய மக்களை...
வேலையும் வீடும் விழாக்கள் பண்டிகையென
வாழ்வினை அழகாய் வரைந்த நன்மக்களை..
"ஆயுதம் எடு" எனப் பணித்தது சிங்களம்!
"வா யுத்தக் கள"மென வலிந்து அழைத்தது!
"சா நிதம்" என்ற சரிதையைத் தமிழன்
சந்ததி தலையிலே பதித்தது பௌத்தம்!

அந்நியன் பாதம் ஆடிய தாண்டவத்தால்
அன்னை அழுதாள், அப்பன் துடித்தெரிந்தான்!
சின்னமகள் செத்தாள், செல்வ மகன்
சிரசிழந்தான்!
திண்ணையிலே படுத்துத் தூங்கியவர்
துண்டானார்!
"அண்ணா" எனக் கதறி அன்புத் தங்கை

www.tamilarangam.net



உணர்விழந்தாள்
முன்னால் நடந்த முழுக்கொடுமை
தாங்காமல்
தன்னாவி போக்கித் தரைவீழ்ந்தாள் அக்கா!

பள்ளிக்குப் போன பிள்ளை
பாதியிலே உயிர்பிரிந்தான்
பாடசாலைக் குஞ்சுகள் மேல்
பாவி குண்டுமழை பொழிந்தான்!
மச்சானோ முற்றத்தில்
மார்பு பிளந்துருண்டான்!
மாமனோ தன் காலைக்
காணாது தேடிநின்றார்!
குற்றாவியோடு
கோடியிலே மூதாட்டி
செத்தாளைப் போல
செந்நீரிற் புரண்டிருந்தாள்!

தாம் பிறந்த மண்ணிற்
தாம் வாழ வழியின்றித்
தேம்பியழுதார்கள்
தெருத் தெருவாய் அலைந்தார்கள்!

இன்ன நிலைகண்டு இதயம் வெடித்தெரியச்
சின்னக்கரம் உயர்த்திச் செங்களத்தின்
வழிநடந்தார்
முன்னைப் பிறப்பின் முடிச்சோழர், முழுவங்க
மன்னர், மறவர்கள், மணித்தமிழின் வீரர்கள்!
இன்னும் அடிமையென எம்தேசம்
விலங்கோடு
கண்ணீர் விடுவதுவோ?
கலங்குவதோ?எனக்கேட்டு
தன்னாட்சி கொண்டு தலைநிமிரப்
புறப்பட்டார்
முன்னாள் வரலாற்றின் மீட்புக்கு முற்பட்டார்!

நாவீரம் நகர....
பாவீரப் பரணியும் பயனற்றுப் போக...
"சா – ஈரம்" தாங்காது தாய்நிலம் நோக ..



"மாவீர வரலாறு" மடிப்பிச்சை போட்டது!
பொறுமையின் எல்லையிற்
போர்ப்பறை சாற்றிய
பெருவரலாறு
கொண்ட எம்மினத்தின்
உறுதியைக் கண்டு
உலகமே அதிர்ந்தது!
உண்மையும் தர்மமும்
உறுமிடக் கண்டது!

"கரும்புலி" என்றொரு
காவியப் பாத்திரம்
கன்னித் தமிழ்மகள்
ஈன்றனள் மண்ணிலே!
குறுமுனி அகத்தியன்
தலைமையில் அவனுடன்
பன்னூறு படைஞரைப்
பாருக்கு அளித்தனர்!
"கொடும்பலி" தந்தும்
கொள்ளுவம் விடுதலை!
என்னும் இளையவர்
எம்மிடை எழுந்தனர்!
அருந்திறன் ஆற்றலும்
ஆள்திறன் ஏற்றமும்
கொண்டவர் கொள்கையால்
வேங்கையராயினர்!

குடும்ப நல்வாழ்வின்
குடைதனை நீங்கியே
கூட்டம் கூட்டமாய்
பெரும் படையாகினர்!
கடும் பசி தாகம்
நித்திரை மறந்து
காலத்தின் கையிலோர்
காவியமாகினர்!

நேரிய பார்வையும்
நீதியின் பார்வையும்
காரியம் இலக்காய்க்
கண்டிடும் பான்மையும்
வேரென விடுதலை
விளைந்திடும் மேன்மையும்
சூரிய சிந்தையும்
கொள்கையில் மானமும்
பேரெரிடும் வீரமும்
புதுமையின் ஈரமும்
ஊறிடும் நேயமும்
உரியவராயினர்!

கடின உழைப்பால்
கடுந்தவம் பயிற்சியினால்
நெடிய நடையால்
நீச்சலாற் பாய்ச்சலால்
உடலில் உயிரில்
உணர்வில் விசையேற்றி
இடியாய் மின்னலாய்
எரியாய் உருவெடுத்தார்!
பொடியாய்ப் பகைவன்
போக அவன்முன்னே
வேடியாகி வெடித்தார்
வீடிவுக்கு வித்தானார்!

பதுங்கித் தாக்கிடும்
போர்முறை தாண்டி
நெருங்கிப் போரிடும்
நெறிதனில் இறங்கினர்!
உலகத்துப் படையெல்லாம்
ஒன்றாகத் திரட்டிவந்து
வலைபோட்டுப் பிடிக்க
வட்டமிட்டார் சிங்களத்தார்!
தலைகெட்டுப் போன
அமெரிக்கர் தர்மத்தை
விலைகேட்டு வாங்க
விஷமத்தனம் புரிந்தார்
உலைவைக்க நின்ற
ஒட்டுமொத்தச் சக்திகளை
தலைவைத்துப் படுக்காதீர்
என்றே தமிழ்வீரர்
முலைமுட்டப் பருக்கி
மறுதிசைக்கு அனுப்பிவைத்தார்!

சிங்களப் பகைவன்
சிரசிலே காலபட
மங்களம் பாடி
மறுபக்கம் ஓடினான்!

இத்துணை வேள்வியும்
எம்மண்ணில் நடக்கையில்



கத்தி பொல் வாளுடன்
கையிலே துவக்குடன்
மற்றவர் மண்ணிலே
மதுஉண்ட மயக்கத்தில்
சுற்றியே மோதிடும்
இளைஞரை நினைக்கையில்
பற்றியே நெஞ்சம்
பஞ்சென எரியுதாம்!

எத்துணை ஆழம்
எமக்காக அன்பிருந்தால்
அத்தனையும் துறந்து
எமக்காகத் தம்வாழ்வை
வைத்திருப்பார் பணயம்?
வகுத்திருப்பார் போர்ப்பயணம்?
உத்தமர்கள் இவரின்
இதயத்தின் தூய்மையாக
எத்தொடரால் வீபரிப்போம்?
எதுசெய்து கடன் தீர்ப்போம்?

என்னரிய தமிழினமே!
எழுந்தொருக்காற் செவிதருவாய்!
மண்ணுரிமை பெற்று
விண்ணிலெங்கள் கொடிபறந்தால்
அன்றியெமக் கிந்த
அவனியிலே பெருமையில்லை!
அன்னையங்கே யாடையின்றி
அடிவயிற்றுக் கஞ்சியின்றிக்
கண்ணீரில் வாடுகையில்
கோடிசெல்வம் ஏதுசெய்யும்?

மண்ணுக்கு வித்தாகும்
மான விளக்குகளை
இன்னும் இழந்தால்
எமையாள யாரிருப்பார்?
அன்னை தமிழீழம்
ஆட்சியுடன் மீண்டும்
மின்னட்டும் என்று
வீழப்போடு பணிசெய்வோம்!
எண்ணத் துயர்ந்த
எம்தலைவன் தலைமையிலே
பின்னின் றுழைப்போம்!
பெருவெற்றி கண்டிடுவோம்!

- புலவர்

www.tamilarangam.net



# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட் 8




மார்ஷல் சுயிக்கோவ்

நகரத்தில் இரண்டாவது படை வரிசைகள், சேம இருப்புகளின் எதிர்த்தாக்குதல்கள் போர்க்களச் சூழ்நிலைகளில் தொடுக்கப்பட்ட எதிர்த்தாக்குதல்களிலிருந்து பெரிதும் மாறுபட்டன.

போர்க்கள சண்டை முறைகள் நகரத்தின் உள்ளே சரிப்பட்டு வரா என்பது நகரத்தின் மையத்தில் சண்டைகள் துவங்கிய போது தெளிவாயிற்று. கல் கட்டிடங்களில் எதிரிகள் ஏற்படுத்தியிருந்த ஏராளமான வலுவிடங்களும் அடர்த்தியாக நின்ற பீரங்கிகளும் எங்களுடைய எதிர்த் தாக்குதல்களுக்கு இடர்பாடாய் விளங்கின, பேரிழப்புகளை ஏற்படுத்தின.

இரு தரப்பிலும் தாக்குதல், எதிர்த்தாக்குதலின் போது பக்கவாட்டுப் பகுதிகள் திறந்தன; வலுவான கட்டிடங்கள் போர் வரிசைகளைப் பிளந்தன.

ஆரம்ப நாட்களிலிருந்தே நாங்கள் பரவலாகப் பின்பற்றிய எதிர்த்தாக்குதல் முறைகள் பின்வருமாறு இருந்தன: ஒன்று, நாங்கள் எங்களுடைய தற்காப்பின் ஆழத்தில் பாசிஸ்டுகள் இருந்த கட்டிடங்களைக் கைப்பற்ற ினோம் அல்லது எங்களுடைய முன்னணிக்கு முன் எதிரி ஆதாரத் தளங்களாக மாற்றியிருந்த பகுதிகளைத் தாக்கினோம்.



சிறு யூனிட்டுகள் இந்தப் பணியை நன்கு செய்து முடிப்பது சண்டைகளின் போது தெளிவாயிற்று. இவை எதிரியின் ஆதாரத் தளங்கள் மற்றும் தற்காப்பு மையங்களுக்கு இடையில் புகுந்தன; அவற்றை சுற்றி வளைத்தன. உள்ளே ஆழத்தில் புகுந்து சென்று, கட்டிடங்களைத் திடீரென தாக்கிப் பிடித்தன. பின் கட்டிடங்களைத் தற்காப்பிற்கு ஏற்றவாறு மாற்றியமைத்தன.

நகரத்தில் சிறு துப்பாக்கிப்படை யூனிட்டுகளால் தம் பலத்தைக் கொண்டு எல்லாத் தடைகளையும் மீறி எதிரியின் தாக்குதலை அடக்க முடியவில்லை. மூடிய இடங்களிலிருந்து இயங்கிய பீரங்கிகள் அவ்வளவு பயன்தரவில்லை. எனவே எதிரி சுடும் சாதனங்களை வைத்திருந்த கட்டிடங்களையும் சுவர்களையும் இடித்து அழிக்க சிறு துப்பாக்கிப்படை யூனிட்டுகளுக்கு பீரங்கிகளும் டாங்கிகளும் வழங்கப் பட்டன. சுவர்களில் ஓட்டையிடவும், தடைகளைத் தாண்டிச் செல்லவும், எதிரியை ஆதாரத் தளங்களிலிருந்து விரட்டவும் சிறு யூனிட்டுகளுக்குப் பொறியியல் பிரிவு வீரர்களும் இரசாயனப் பிரிவினரும் அளிக்கப்பட்டனர். இப்படியாக, நகர சண்டைகளை நடத்தவல்ல தாக்குதல் குழு ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு முறையும் இது தாக்க வேண்டிய இலக்கு, கைவசமுள்ள சக்திகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டது. எதிரியின் வலுப்படுத்தப்பட்ட மையங்களைத் தாக்கும் திட்டம் கமாண்டராலும் தலைமையகத்தாலும் தீட்டப்பட்டது. சாதாரணமாகத் தாக்குதல் குழுவில் ஒரு காலாட்படை பிளாட்டூன் அல்லது கம்பனி (20–30 துப்பாக்கி வீரர்கள்), 2–3 நேரடியாகச் சுடும் பீரங்கிகள், 1–2 பொறியியல் பிரிவு, இரசாயனப் பிரிவின் சிறு யூனிட்டுகள் ஆகியவை இருந்தன. எல்லா போர் வீரர்களுக்கும் தானியங்கி துப்பாக்கிகளும் ஏராளமான எறிகுண்டுகளும் வழங்கப்பட்டன.

தாக்குதல் குழுக்களின் தீவிர நடவடிக்கைகள், எதிரியை எப்போதும் பதற்ற நிலையில் வைத்திருந்தன. எங்களுடைய யூனிட்டுகளின் தாக்குதல்களால் எதிரி கட்டிடங்களை மட்டுமின்றி தன் ஆதாரத் தளங்களையும் விட்டு ஓடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டான்.

பல நேரங்களில் பூர்வாங்கமாக பீரங்கிகளால் சுடாமலேயே தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. எதிரி துருப்புகள் நடந்து கொள்ளும் விதத்தை வைத்து தாக்குதலுக்கான நேரம் நிர்ணயிக் கப்பட்டது. எதிரிப் படையினர் எப்போது ஓய்வெடுக்கின்றனர், எப்போது உண்ணுகின்றனர், துருப்புகள் எப்போது மாறுகின்றன என்பவையெல்லாம் கணக்கில் கொள்ளப்பட்டன. இவற்றை யெல்லாம் கணக்கில் கொண்டு செயல்பட்ட நாங்கள் பல சமயங்களில் நிலவறைகளில் முழு எதிரி யூனிட்டுகளைப் பிடித்தோம்.

தாக்குதல் குழுக்களும் நகர ஆதாரத் தளங்களும் எங்களுடைய தற்காப்பில் மிக முக்கிய பங்காற்றின என்று அனுபவம் காட்டியது. படையின் துருப்புகள் எதிரியின் தாக்குதல்களை முறியடித்தன. தாமே தாக்குதலில் இறங்கின; துணிவாக முன் சென்றன; நிலவரத்தைத் தம் கரங்களில் எடுத்துக் கொண்டன. எங்களுடைய போர் வீரர்கள் தற்காப்பில் நின்ற அதே நேரத்தில் இடையறாது முன்னேறித் தாக்கினார்கள் என்பதில்தான் எங்க ளுடைய வல்லமை இருந்தது.

பொது தாக்குதலின் போதும் தாக்குதல் குழுக்கள் பெரும் பங்காற்றின. எதிரி கைப்பற்றிய நகர கட்டிடங்களையும் பகுதிகளையும் இவை துணிவான திடீர்த் தாக்குதல்கள் மூலம் மீட்டன.

ஒரு குறிப்பிட்ட இலக்கைத் தாக்க 62வது படையின் பிரிவுகள் தாக்கும் குழுக்கள், பிடித்த இடங்களில் உறுதியாக நிற்கும் குழுக்கள், சேம இருப்பு ஆகியவற்றை ஒதுக்கின. ஒரே கடமையை நிறைவேற்றுவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட இந்த மூன்று குழுக்களும் சேர்ந்துதான் தாக்குதல் குழு என்ற முழுமையான அமைப்பை உருவாக்கின.

தலா 10–12 நபர்களடங்கிய தாக்கும் குழுக்கள்தான் தாக்குதல் குழுவின் அடிப்படையாகும். இவர்கள்தான் கட்டிடங்கள், மர அரண்களினுள் முதலில் நுழைந்து உள்ளே சண்டை யிட்டனர் ஒவ்வொரு குழுவிற்குமெனத் தனித்தனியாக கடமைகள் இருந்தன. இவற்றின் ஆயுதங்கள் – தானியங்கித் துப்பாக்கி, எறிகுண்டு, கத்தி, மண்வெட்டி – இலகுவானவை. எல்லா குழுக்களுக்கும் ஒரே கமான்டர் தலைமை தாங்கினார். இதற்காக அடையாள ராக் கெட்டுகள், ஒளிரும் ராக் கெட்டுகள், சில நேரங்களில் தொலைபேசி ஆகியவை அவரிட மிருந்தன.

பிடித்த இடங்களில் உறுதியாக நிற்கும் குழுக்கள் ஒருசில உட்குழுக்களாகப் பிரிக்கப்பட்டன; இவை தாக்கும் குழுக்களுக்குப் பின் ஒரே நேரத்தில் பல திசைகளிலிருந்து, "புகுந்து விட்டேன்" என்று கமான்டரிடமிருந்து அடையாள சமிக்ஞை வந்ததும்) புகுந்தன. கட்டிடத்தினுள் புகுந்து, எதிரியின் சுடுமிடங்களைப் பிடித்ததும் அவை உடனடியாக சொந்தத் தற்காப்பை ஏற்படுத்தின. எதிரியை நோக்கிச்சுட ஏற்பாடுகளைச் செய்தன. தாம் தாக்கியவர்களுக்கு எவ்வித உதவியும் வராமல் தடுத்தன. பிடித்த இடங்களில் உறுதியாக நிற்கும் குழுக்களின் ஆயுதங்கள் – கனரக மற்றும் கை இயந்திர பீரங்கிகள், டாங்கி எதிர்ப்பு துப்பாக்கிகள், மார்டர் பீரங்கிகள், டாங்கி எதிர்ப்பு பீரங்கிகள், இரும்பு சட்டங்கள், வெடிமருந்து – கனமானவை. ஒவ்வொரு குழுவிலும் சாதாரணமாக பொறியியல் பிரிவு வீரர்கள், குறி தவறாத் துப்பாக்கி வீரர்கள், மற்றய துறைகளைச் சேர்ந்த போர்வீரர்கள் ஆகியோர் இருந்தனர்.

தாக்கும் குழுக்களை இட்டு நிரப்பி வலுப்படுத்தவும், பக்கவாட்டுகளிலிருந்து வரக் கூடிய தாக்குதல்களை முறியடிக்கவும், (தேவையெனில்) முற்றுகைக் குழுவாக இயங்கவும் சேமப் பிரிவுகள் பயன்படுத்தப்பட்டன. அவசியம் ஏற்பட்ட போது சேமப் பிரிவுகளிலிருந்து புதிய, கூடுதல் தாக்கும் குழுக்கள் உருவாக்கப்பட்டன.

ஒரு யூனிட்டிலிருந்து தாக்குதல் குழுக்களை உருவாக்குவதுதான் சிறந்ததென நடைமுறை காட்டியது. கம்பனியிலோ பட்டாலியனிலோ நிலையான தாக்குதல் குழுக்கள் இருக்க வேண்டும் என்ற பேச்சிற்கே இடமில்லை. ஒவ்வொரு பிளாட் டூனும் ஒவ்வொரு ஸ்குவா ட்டும் ஒவ்வொரு போர் வீரனும் இம்மாதிரித் தாக்கும் திறமையைப் பெற்றிருக்க வேண்டும்.

தொடரும்......

## ஆயுதக் கொள்வனவு .......

ஆயுதக் கொள்வனவில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதற்குக் காரணம் என்பது பெரும் ஏமாற்றுத்தனமானதே. உண்மையில் இது மோசடிக்கு ஒத்துப்போதல் அல்லது இயலாமை என அர்த்தப்படும். ஏனெனில், சிறீலங்கா அரசு ஒரு இரகசியமான அமைப்பு அல்ல, அது பெரும் பேரங்கள் ஒப்பந்தங்கள் என்பவற்றை அரசு வெளிப்படையாகவே மேற்கொள்ள முடியும். ஆயுதங்களைக் கொள்வனவும் செய்யமுடியும். ஆகையால், அனுமதிகள் மூலம் ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் ஊழல் மோசடிகளுக்கு ஒத்துப் போகின்றார்கள் அல்லது ஈடுபடுகின்றார்கள் என்றே சொல்ல முடியும். இந்த வகையில் சந்திரிகா அரசானது ஊழல் மோசடி விவகாரத்தில் முன்னைய ஐக்கிய தேசியக் கட்சிய அரசிற்கு சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்துள்ளது எனலாம். ஒருவகையில் பார்த்தால் இவ்விவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினர் 17 வருடத்தில் பெற்ற வளர்ச்சியை சந்திரிகா அரசு 3 வருடத்தில் பெற்றுக் கொண்டு விட்டது எனலாம். ★

www.tamilarangam.net



# வடபகுதி மக்களை பட்டினியால் அழிக்க அரசின் மீண்டுமொரு நிவாரண வெட்டு

வட பகுதியில் இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தின் ஒரு பகுதியைச் சந்திரிகா அரசு வெட்டியுள்ளது. இவ் வெட்டானது, 10 வீதத்தில் இருந்து 15 வீதம் வரையில் மாறுபட்ட அளவில் உள்ளது. இந்நிவாரண வெட்டிற்கு அரசிற்கு ஏற்பட்ட பாரிய நிதி நெருக்கடியே காரணமாகும் எனவும் கூறப்படுகின்றது.

சிறீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு வழங்கும் நிவாரணங்களில் கைவைப்பது இது முதற் தடவையல்ல. காலத்துக்குக் காலம் நிவாரணங்களில் பெருவெட்டுச் செய்வதும் – காலம் கடந்த நிலையில் சீரற்ற விதத்தில் நிவாரணத்தை விநியோகிப்பதும் வழமையான நடவடிக்கையே ஆகும். ஒருவகையில் இந்நிவாரணக் கொடுப்பனவுகள் கூட விரும்பாத நிலையில் கொடுத்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத் தேவை என்பனவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகவே உள்ளது.

ஏனெனில், வடக்கு கிழக்கு நிவாரணப் பணிக்கெனப் பெரும் தொகை நிதியைச் சந்திரிகா குமாரதுங்க அரசு வெளிநாடுகளில் இருந்து பெற்று வருகின்றது. அதற்கான கோரிக்கைகளையும் விடுத்தும் வருகின்றது. இந்த நிலையில் நிவாரணத்தை முற்றாக வெட்டுவதோ அன்றி நிறுத்துவதோ சிறீலங்கா அரசைப் பொறுத்து பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தக் கூடியதாகும். இந்த நிலையில் நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது என்பதை உலகிற்குக் காட்டவேண்டிய தேவை அரசிற்கு உண்டு.

ஆனால் இந் நிவாரண வெட்டானது, போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களைப் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாக்கக் கூடியதாகும். ஒருபுறம் போரால் இடம்பெயர்ந்துள்ள ம்க்கள் – மறுபுறம் அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடை மற்றும் கட்டுப்பாடுகளினால் மக்கள் தமது பொருளாதாரத்தையே முற்றாக இழந்து போயுள்ளனர். இந்த நிலையில், தமிழ் மக்களுக்கு வழங்கும் நிவாரணத்தில் அரசு வெட்டுவதென்பது மக்களைப் பட்டினி போட்டுச் சாகடிக்க மேற்கொள்ளும் முயற்சியே ஆகும்.

இது ஒருவகையில் இனஒடுக்கு முறையின் ஒரு வடிவம் என்று கூடக் கூறலாம். அதாவது, இராணுவத்தின் கண்மூடித்தனமான தாக்குதல்களில் தப்பிப் பிழைத்து, பொருளாதாரத் தடைகளுக்கு இடையில் தமது உயிர்களை மட்டும் பிடித்துக் கொண்டு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை மேலும் இன்னலுக்கு உள்ளாக்கி சாகடிக்கும் முயற்சி ஆகும். இந்த வகையில் இன ஒடுக்கு முறையை / இன அழிப்பை நிவாரண வெட்டு மூலம் அரசு தீவிரமாக்க முனைகின்றது எனலாம்.

அரசிற்கு ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியே நிவாரண வெட்டிற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால், வெட்டுச் செய்வதற்கு வேறு துறைகள்தான் இல்லையா? வரவு – செலவுத் திட்டத்தில் 30 வீதமான இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ள இராணுவச் செலவீட்டில் வெட்டுச் செய்ய முடியாதா? அன்றி தென்னிலங்கையில் பல்வேறு ஒதுக்கீடுகளுக்குச் செய்யப்படும் நிதிகளில்தான் வெட்டுச் செய்யமுடியாதா?

கடந்த பாராளுமன்றக் கூட்ட அமர்வின்போதும் – இராணுவச் செலவீட்டிற்கென மேலும் 75 கோடி ரூபா குறைநிரப்புப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. அதுவும் இவ்வாண்டின் ஆறாவது மாதத்தில் இக்குறைநிரப்புப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இவ்வாண்டின் இறுதிக்குள் இன்னமும் பல நூறுபோடி ரூபாக்கள் குறைநிரப்புப் பிரேரணையாகச் சமர்ப்பிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கலாம்.

அவ்வாறு இருந்தும் அரசு போரின் செலவீட்டைக் குறைக்கவோ, மட்டுப்படுத்தவோ விரும்ப்வில்லை. மாறாகத் தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணக் கொடுப்பனவுகளை வெட்டவே அது விளைகின்றது. இதுதவிர, போரை நடத்துவதுதான் அரசின் குறிக்கோளாக இருப்பின், அதற்கான ஒதுக்கீட்டை குறைக்க முடியாது எனின், இந்நிவாரண வெட்டை நிறுத்தி வேறு துறைகளுக்கான மானியம் – உதவி என்பனவற்றைக் குறைத்து நிவாரணத்தை ஒழுங்காக வழங்கியிருக்க முடியும். ஆனால், அரசிற்கு அதில் ஆர்வம் இல்லை. தமிழருக்கு வழங்கப்படும் ஒரே ஒரு உதவியைக்கூட நிறுத்தி விடுவதே அரசின் குறிக்கோள் ஆகும்.

இந்த நிலையில், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றும், வடக்கு – கிழக்கில் புனரமைப்பு புனர்வாழ்வு எனவும் அரசு பேசுகின்றது. இதனை ஏற்பதற்குத் தமிழ்க் குழுக்களும் இருக்கின்றன. அரசிற்கு உதவ வெளிநாட்டு அர்சுகளும், நிறுவனங்களும் உள்ளன. அதாவது பயங்கரவாதத்திற்கு எதிரான போர் எனக் கூறிக்கொண்டு ஓர் இன அழிவையும் / ஒடுக்கு முறையையும் மேற்கொள்ளும் சிறீலங்கா அரசிற்கு 'ஜனநாயகத்தின்' பெயரில் உதவுவதற்கு வெளியார் பலர் உள்ளமைதான் வேடிக்கையானது. ★

## வெற்றியுண்டு பயமில்லை......

மறுபடியும் யுத்த முனைக்கு அனுப்புவதோடு புதிதாக சிங்கள மாணவர்களை ஆசை காட்டி இராணுவத்தில் சேர்க்கவும் சந்திரகா அரசு பகீரத முயற்சி செய்கிறது.

தேசியத் தலைவர் பிரபாகரனின் வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால் "சிங்கள இளைஞர்களை கண்டிப் பிரபுத்துவ வர்க்கத்தின் வரட்டுக் கௌரவத்திற்கும் குருட்டுக் கொள்கைக்கும் பலிக்கடாவுகளாக்க" சந்திரிகா அரசு கங்கணம் கட்டி நிற்கிறது.

விடுதலைப் புலிகளை முறியடித்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடுவதே சந்திரிகா அரசின் குறிக்கோளாக இருக்கிறது.

அதுவும் ஆகஸ்டு மாதம் முதலாம் நாள் நடைபெற இருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறுமுன் கிளிநொச்சியைப் பிடித்து வெற்றிவிழாக் கொண்டாட சந்திரிகா் அரசு துடிக்கிறது.

விடுதலைப் புலிகளை யுத்தகளத்தில் தோற்கடித்து விட்டால் தீர்வுப் பொதிக்கு வேலையில்லாமல் போய்விடும். இப்போதே தீர்வுப்பொதி உறையில் போடப்பட்டுவிட்டது மாதிரித்தான் காரியங்கள் நடைபெறுகின்றன.

"யுத்தம் முடிவுக்குக் கொண்டு வர்ப்படும் வரை அரசியல் தீர்வொன்று தேவையற்றது. யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் தீர்வுப் பொதியினால் பயன் எதுவும் இல்லை." என இராணுவ தளபதி றோகன் தலுவத்த கூறியிருக்கிறார்.

"அப்படியென்றால் ஐ. தே. கட்சியின் மாற்று யோசனைகள் எதற்கு? அப்படியே மாற்று யோசனைகளைச் சமர்ப்பித்தாலும் அதனால் என்ன பயன்?" என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆனால், இராணுவத் தளபதி தலுவத்தையின் கூற்றைக் கொழும்புத் துரோகக் குழுக்கள் காதில் போட்டதாகவே தெரியவில்லை. மானம் துறந்து உயிர் பெரிது என்று வாழும் வாழ்க்கையே சுகம் என்று சொல்லி, ஈனத் தொண்டியற்றி மாற்றானிடம் குற்றேவல் செய்து வாழ்பவர்கள், விண்ணில் இரவிதனை விற்று மின்மினி கொள்ள நினைப்போர் அதனைக் காதில் போட்டுக் கொள்ளாததில் எள்ளத்தனையும் ஆச்சரியமில்லை!

சிங்கள இராணுவத்தை தமிழ் மண்ணில் இருந்து, குறிப்பாக வன்னி மண்ணிலிருந்து விரட்டும் வரை தமிழ் மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கை இல்லை என்பதே இன்றைய யதார்த்த மாகும். இதற்கு தென் தமிழீழத்தில் உள்ள உப்பாறு கிராமம் அருமையான எடுத்துக்காட்டாகும். இரவோடு இரவாக அந்த மக்கள் உடுத்த உடையோடு சொந்த வீடுகளிலிருந்து சிங்கள இராணுவத்தால் விரட்டியடிக்கப்பட்டிருக்கிறார்கள். மீண்டும் கிராமத்திற்குள் போக எத்தனிப்பவர்கள் சுட்டுத்தள்ளப் படுவார்கள் என்று இராணுவம் மிரட்டியுள்ளது.

வன்னி வணங்கா மண். அந்த மண்ணை "எமது உயிரிலும் மேலாக நேசிக்கிறோம். எமது தாயக தேசம் எம்து இனத்தின் உயிருக்கு நேரானது. அந்த மண்ணைப் பாதுகாப்பது எமது இனத்தின் ஆன்மாவை பாதுகாப்பதற்கு நிகரானது. எமது தாயகத்தின் இதயத்தை ஊடுருவி நிற்கும் ஆக்கிரமிப்பாளரை எமது மண்ணிலிருந்து விரட்டியடிக்கும்வரை ஜெயசிக்குறுச் சமர் ஓய்ந்துவிடப் போவதில்லை" எனத் தமிழீழத் தேசியத் தலைவரும், இராணுவத்துறையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தளபதியுமான மேதகு வே. பிரபாகரன் வெஞ்சினத்தோடு சூழுரைத்துள்ளார்.

இனி–வெற்றியுண்டு. பயமில்லை மனமே–

இந்த ஜன்மத்தில் விடுதலையுண்டு நிலையுண்டு!

## சிறீலங்கா அரசினதும்.........

இச்சம்பவம் சர்வதேச மன்னிப்புச் சபையால் உறுதி செய்யப்பட்டு உலகிற்கு அம்பலப்படுத்தப்பட்டதை அடுத்து இவர்கள் சிறீலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு சாட்சிகளால் அடையாளம் காணப்பட்டு நீதி விசாரணையை எதிர்நோக்கி இருந்தனர்.

மேலும், ஒரு பெண்– ஜனாதிபதியாக உள்ள சிறீலங்கா அரசால் தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் வன்முறைகளும் தாக்குதல்களும் தாராளமாக கட்டவிழ்த்து விடப்பட்டு வருகிறது. யாழ் பல்கலைக்கழகத்துள் புகுந்த சிங்களப் படைகள் 15 தமிழ் மாணவிகளை பகிரங்கமாக அடித்து நொருக்கியுள்ளனர். அத்துடன், மட்டக்களப்பு கோட்டைக் கல்லாறில் சந்திரிகாவின் அதிரடிப்படை, மூன்று தமிழ்ப் பெண்களை பொதுமக்கள் முன்பாக மிக கேவலமாகத் தாக்கிய சம்பவம் தமிழ்ப் பெண்கள் மீதான சந்திரிகா அரசின் கொடுமைகளுக்கு மற்றொரு உதாரணமாக உள்ளது.

மேலும் ஐ.நா. மனித உரிமைகளை பேணும்படி சிறீலங்காவிடம் கேட்கும் இதே கால கட்டத்தில் 18 க.பொ்.த உயர்தர மாணவர்களையும் 9 பல்கலைக்கழக மாணவர்களையும் 5 ஆசிரியர்களையும் யாழ்குடா நாட்டில் காணவில்லை என கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு யாழ் – அரியாலை அதிபர் திரு. பஞ்சலிங்கம் அளித்துள்ள பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிட த்தக்கது. மட்டக்களப்பு களுதாவளை மகாவித்தியாலயத்திலும் ஒன்பதாம் ஆண்டில் கல்வி பயிலும் 3 மாணவிகள் காணாமல் போயுள்ளனர். யாழ் மட்டுவிலிலும் இரு தமிழ் இளம் பெண்கள் காணாமல் போயுள்ளனர். இப்பெண்களில் ஒருவர் திருமணமானவர். தமிழர் தாயகத்தில் 141 பாடசாலைகள் படைகளின் நடவடிக்கைகளால் மூடப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டிய ஆசிரியர் ஒருவர் சிறீலங்கா படைகளை விலகும்படி ஐ.நா. அழுத்தங்களை மேற்கொண்டால் மட்டுமே தமிழர்களுக்கு மனித உரிமைகள் மீளும் எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே வன்னியில் நடைபெறும் இராணுவக் கொடுமைகளை விளக்கிய வண்ணம் இரு தமிழ்நாட்டு வர்த்தகர்கள் மிதி வண்டியில் நெய்வேலியில் இருந்து டெல்லி வரை 57 நாட்கள் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். வி ஜெயகுமார் , பி. பிரணவாச்சாரியார் என்னும் இவ்விரு தமிழ்நாட்டு வர்த்தகர்களும் சென்னை –பெங்களூர்– பூனே –மும்பாய் –அகமதாபாத் –யெய்ப்பூர் வழியாக டில்லியைச் சென்றடைந்தனர். சிறீலங்கா அரசின் மீது இந்திய அரசு பொருளாதாரத் தடைகளை விதிக்க கோரியும் சிறீலங்கா அரசு தமிழ் மக்களை இன அழிப்புச் செய்வதைக் கண்டித்தும் தாம் இந்த மிதி வண்டி யாத்திரையை நடாத்தியதாக இவர்கள் பத்திரிகையாளர்களுக்குத் தெரி வித்துள்ளனர்.

மேலும், வெளிநாட்டு முதலீடுகளைக் கவரும் நோக்கில் சிறீலங்கா அரசாங்கம் புதிய நடைமுறைகளை அறிவித்துள்ள நேரத்தில் சிறீலங்கா வங்கியாளர் சங்கம் சிறீலங்கா அரசே போரை முன்னெடுக்கிறது எனக் குற்றம்சாட்டி வெளியிட்டுள்ள அறிக்கை சிறீலங்கா அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. போரினை நிறுத்தி அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவோம் என்ற ஆணையுடன் அரசமைத்த இன்றைய ஆட்சியாளர்கள் மக்களின் ஆணையை மறந்து போரினை முன்னெடுப்பதில் கவனம் செலுத்துவது கண்டிக்கப்பட வேண்டிய நட வடிக்கையாகும். மாறாக இப் போரினை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேசுவதே இதற்குத் தீர்வாக முடியும் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ★

www.tamilarangam.net



# சிறுகதை




காணி பூமி வளம் யாவற்றையும் வெளியூர் துரைமாருக்குப் பணயம் வைத்து கிடைக்கும் வெள்ளிப் பணத்தில் தமிழினத்துக்கு கொள்ளி வைக்கும் அரசின் கஜானா காலியாகிக் கிடப்பது போல் காலை முதல் மாலை வரை மண்ணோடு கட்டிப் புரளும் அந்த விவசாயிகளின் வாழ்வும் வெறிச்சோடியே கிடந்தது.

உழைப்பின் ஊதியத்தை காலடியில் உதறிக் கொட்டிவிட்டு மேலெழுந்து தனது கோர முகத்தைக் காட்டும் வாழ்கைச் செலவீனங்கள் அம் மக்களை ஒட்டாண்டிகளாகவே ஓட்டிக் கலைத்தது. எட்டு ஜீவன்களை, ஒருங்கிணைத்த பேபிசிங்காவின் குடும்பம் திணறிக் கொண்டு தான் வாழ்ந்தது.

கிராமசபைக்கு சொந்தமான குப்பைக்கரத்தை மாடு பற்கள் விழுந்து கிழம் கட்டிவிட்ட பின்னர் 'பென்சனில்' அவிழ்த்து விடுவது மாதிரி, பேபி சிங்காவை இப்போ யாரும் கருதுவதில்லை. வயல் விதைப்பு, வெட்டு எல்லாவற்றுக்கும் அவரது மூத்த மகனான கருணாவையும் அவன் தங்கைகளான இரு பெண்களையும் தான் அழைப்பார்கள். நான்காவது பையன் பதினேழு வயதில் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தான். பேபிசிங்காவின் இலட்சியம் அவன் பிள்ளை, சில பெரிய வீட்டுப் பிள்ளைகளைப்போல் நான்கு சொல் படித்து காற்சட்டை அணிந்து உத்தியோகம் பார்க்க வேண்டும் என்ற ஆசை.

மூத்தவன் கருணாவுக்கு விகாராபதி அழைப்பு அனுப்பியிருந்தார். ஏதோ வேலை, மண்வெட்டியுடன் வரச் சொல்லியிருந்தார். விகாரையைச் சுற்றியிருந்த வடிகால் தூர்த்துவிட்டது. மண்ணெடுக்க வேண்டும். வேலை முடியும் வரை ஊரிலிருந்து வருகிற அளவுக்கு தேநீர், சாப்பாடு எல்லாவற்றிலும் சமபங்குண்டு.

சாது, அருகில் வந்து குன்றில் அமர்ந்து கொணடார். "கருணா.... எப்படிச் சுகம்? வீட்டு நிலை என்ன மாதிரி?" கஸ்டந்தானா என்று விசாரித்தார்.

"கஸ்டம் யாரை விட்டுப் போகும் சாது! எப்படித்தான் உழைச்சாலும் ஒரு நேரக்கஞ்சி தான்! ஊருக்குள்ள நிலத்த நம்பி இருக்கிறவன் பூராவும் அதோ கதிதான். வட்டிக்குக் கொடுக்கிறவனும் கசிப்புக் காச்சிறவன் வரைதான் மூன்று வேளை சாப்பிடுறான். மற்றவயளிட வயிற்றை பிரைக்காய்தான் நிரப்புது."

"ஓமோம்.... ஏனப்பா, இராணுவத்துக்குத்தான் நம்முடைய புதிய பாதுகாப்பு மந்திரி..... வேண்டுமான வரை ஆட்கள் எடுக்கிறாரே நீயும் உனது தம்பியும் சேர்ந்து விட்டீர்களென்றால் சீமான் மாதிரி வாழலாமே!"

கருணா ஒருமுறை நிமிர்ந்து தாழுதுறுவைப் பார்த்துவிட்டு மண் வெட்டியைத் தூக்கிக் கொத்தினான். "அதுக்கும் படிச்சிருக்க வேணுமே சாது. நான் இரண்டாம் வகுப்புப் படிச்சவன். ஏதோ நாலு எழுத்து எழுதுவன்.

"அதுபோதும் எது? கையெழுத்துப் போதும். ஜெயசிக்குறுய் சண்டைக்கு படிப்பு எதற்கு. நான் கடிதம் தருகிறேன் இந்த ஊரில் ஐம்பதுக்கு மேல் ஆட்களை சேர்த்து அனுப்பியிருக்கிறேன்" என்றார் துறவி.

"நாளாந்தம் சவம் வராத நாளில்லை சாமி"அவன் நலிந்த குரலில் முனகினான்.

"சேச்சே..! .. சாவு எப்படியும் வரும் பாம்பு கடித்து வருவதில்லையா சாவு? மாதா மாதம் ஏழாயிரம் எட்டாயிரம் உன்னுடைய வேளாண்மை தருமா?"

அதன் பின் கருணா அடிக்கடி துறவியின் முகத்தை நோக்கினான். ஆசைத் தீ அவனுள் நீலமணி போல் கொழுந்துவிட ஆரம்பித்தது. ஏழாயிரம் எட்டாயிரம் அதன் பின் அவனுக்கு வேலை ஓடவில்லை.

அன்று மாலை வரை அவன் அந்தரத்தில் நின்றவாறே வேலையைச் செய்தான். வீடு செல்லும்போது பலவகையான உணர்வுகள் அவனை உலுக்கிக் கொண்டிருந்தன. மாதா மாதம் ஏழு எண்ணாயிரம் ரூபா உழைக்கும் சக்தி அவனுக்குள் முடங்கிக் கிடக்கிறதா? இதனை அவன் இதுவரை கண்டதேயில்லை. அந்தத் துறவி அதனைக் கண்டுகொண்டார்.

வீடு செல்லும்போது லுசி நோனாவின் தேநீர்க் கடைக்குள் புகுந்து ஒரு தேநீர் அருந்தினால் நல்லது போலிருந்தது.

"அக்கே, ஒரு டீ"

"வாடாப்பா, வா.." கடைக்குள் இருந்த கருணாவின் கூட்டாளி சறத் அழைப்பு விடுத்தவாறு கிளாசில் எஞ்சியிருந்த கசிப்பை உறுஞ்சினான்.

கருணா அவனருகில் நெருங்கியமர்ந்தான்.

"கொஞ்சம் குடியேன்"

"வேண்டாம் குளிக்க வேணும்" என்று மறுத்த அவன், தனது இதயநாதத்தை அவனிடம் கொட்டி விட வேண்டும் போலிருந்தது.

"மச்சான்.... நான் இராணுவத்தில சேரப்போறன். ஜெயசிக்குறுய் சண்டைக்குப் போகப் போறன்."

சறத் வாய்விட்டுச் சிரித்துவிட்டான். "எது.. சாது கயிறு தந்துவிட்டார் போல இருக்கு. என்னிடமும் ஒருநாள் சொன்னாரடா. பாதாள பைரவியிட்டப் போக வழிகாட்டுவார்.. .. அங்கியைக் கழற்றி குளத்தில வீசிவிட்டு சண்டைக்குப் போகக் கூடாதா?"

"இல்ல சறத்.. எனது குடும்பநிலை உனக்குத் தெரியாதா.. இந்த மண்ணைக் கிண்டிக்கொண்டு வாழவே முடியாது போலிருக்கு" கருணாவின் குரல் ஈனஸ்வரத்தில் தொண்டைக்குள் இறுகியது. சறத் அவனிடம் அனுதாபங் கொண்டான்.

"உண்மைதாண்டா, நீ குடும்பப் பாரம் உள்ளவன். சிறிலங்காவில் இராணுவத்தை விட என்ன வேலையைக் காட்டினா அம்மா, அம்மா வந்த பிறகு கம்பனிகளுக்கு மூடுவிழா. நான் ஏதோ மூச்சு நின்று போகிற ட்ரக்டர்களுக்கு மூச்சுக் கொடுத்துக் கொண்டு காலத்தைப் போக்கிறன். ஏதோ யோசிச்சுச் செய்துகொள். பிறகு நான் உன்னை நினைச்சு ஒரு துளிக்கண்ணீர் சிந்தக்கூடாது" என்று துக்கம் மேலிடக் கூறினான் சறத். அவர்கள் பொழுது சாயும்வரை பேசிவிட்டுப் பிரிந்தனர்.

மாலை உணவு பரிமாறும்போது பேயாகத் தன்னை ஆட்டிப்படைத்த அந்த ஆசை நெருப்பை அள்ளிச் சிந்தினான் கருணா. இராணுவத்தில் சேரும் சமாச்சாரத்தைக் கேட்டதும் தாய் அலறியடித்து விட்டாள். அண்டை வீடுகளில் நிகழும் ஒவ்வொரு மரணச்சடங்குகளுக்கும் அவள் சென்று கண்ணீர் வடித்துவிட்டு வருகிறவள்தான். அந்தப் பெரிய குடும்பத்தின் உறுப்பினர்கள் யாவருமே அவனைச் சூழ்ந்திருந்து சமாதானப்படுத்தினர்.

"யாரோ கட்டையில போவான் தனது மகனின் மனதைக் கெடுத்துவிட்டான்" என்று அலட்டிக் கொண்டாள் தாய்.

சாது தனக்கு ஒரு கடிதம் தந்து உதவப் போவதை சொன்னான். அவன் தனது தங்கைகள் சோகத்தால் வாடிப் போவதையும் வறுமை அவர்களைச் சாத்தானைப் போல் பற்றிக் கொண்டு அலசி எடுப்பதையும் அவன் வேதனையோடு சுட்டிக்காட்டினான். கண்கள் கலங்கின.

அந்தக் குடும்பமே அவனுக்காக பரிந்துரைத்தது. அம்மா வாயடைத்துத் போனாள். தேசம், ஞானம், கல்வி, ஈசன், பூசையெல்லாம் காசுக்கு முன் சரணாகதி தானே!

இராணுவ ஆட்சேர்ப்பு மையத்தில் கருணாவுக்குப் பலத்த வரவேற்பு. சூடுபட்ட பூனையான அந்தக் கிராமத்திலிருந்து அவன் ஒருவனே சென்றிருந்தான். "சிங்கள தேசத்தைக் காக்க முன்வந்த ஒரே ஒரு உத்தமன் நீ" என்று பாராட்டிய அங்கிருந்த அதிகாரி ஒருவர், அவனுக்கு ஒரு கொக்கோ தேநீர் கொடுக்கும்படி சொன்னார்.

மறுநாளே அவன் தனது சாரம், மேற்சட்டைகளை சுருட்டி எடுத்துக் கொண்டு புறப்பட்டான். கிராமமெங்கிலும் வலைவீசி ஒரு முப்பது பேர் சேர்க்கப்பட்டனர். பின்னர் பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர்.

பயிற்சிக் களத்தில் ராஜ மரியாதை நடந்தது. இராணுவ உடை, மது, உணவு, சிகரெட் எல்லாமே தண்ணீர் போல தாராளமாகக் கிடைத்தது.

அங்கிருந்தவாறு வீட்டுக்கு, தனக்கு தெரிந்த நாலு எழுத்தில் ஒரு கடிதம் வரைந்திருந்தான் கருணா. கடிதத்தோடு பல ஆயிரம் ரூபா நோட்டுக்களும் இருந்தன. தன்னை வவுனியாவுக்குக் கொண்டு செல்லப் போவதாக அறிவித்திருந்தான்.

பேபிசிங்காவின் களி மண்ணாலான வீடு இருந்த இடத்தில் சின்னஞ்சிறு அழகான ஒரு சிறிய கல்வீடு எழுந்து நின்று கண்களை உறுத்தியது. உள்ளேயும் அழகான நாற்காலிகள், மேசைகள், விதவிதமான பொருட்கள் அலங்கரித்துக் கொண்டிருந்தன. வவுனியாவில் சம்பளம் - கிம்பளம் என்று பலரக வருமானம்.

இப்போது முற்றத்தில் கிடக்கும் மரக்குத்தியில் பேபிசிங்கா அமர்வதில்லை. மண்டபத்தில் உள்ள புதிய சாய்மனைக் கதிரையில் கிடந்தவாறு, ரேப்ரெக்கோடரில் பழைய எடிஐயமான - ருக்குமணிதேவியின் பாடலை ரசித்துக் கொண்டு கிடப்பது பொழுதுபோக்கு. ஏன்? வெளியில் செல்லும்போதும் வெள்ளைச் சாரமணிந்து லட்சணமாகத்தான் தென்பட்டார். வீட்டுப் பெண்களும் சற்று நாகரிகமாக விளங்கினர். காதுகளில் கற்கள் பதித்த தோடுகள், நடையுடையெல்லாமே புதியனவையாக சற்று நாகரிமாக விளங்கினர்.

அன்றும் கருணாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அவனது புதுப்பிக்கப்பட்ட வாழ்க்கையின் திடீர் மாற்றங்கள் பற்றி எழுதியிருந்தான்.

தான் ஒரு ராஜாவீட்டுப் பிள்ளை மாதிரி வாழ்வதாகவும் சனங்கள் தன்னிடம் எவ்வளவு மரியாதையுடன் நடந்து கொள்கிறார்கள் என்றும் தான் இதுவரை அங்கு மண்வெட்டியுடன் காலத்தை விரயம் செய்துவிட்டதாகவும் தனது தம்பி சுதுவை உடனடியாக பள்ளிக்கூடத்திலிருந்து நிறுத்தி இராணுவத்தில் சேர்க்குமாறும் கூறியிருந்தான். அத்தோடு வவுனியாவுக்கு விஜயம் செய்த பிரதிப் பாதுகாப்பு மந்திரி, தனது முதுகில் தட்டி தைரியம் சொன்னதாகவும் மகிழ்ச்சிப் பரவசத்தோடு எழுதியிருந்தான்.

கசாப்புப் கடைக்காரனும் கழுத்தில் கத்தி வைக்க முன் கடாவை தட்டித்தடவி சதையை நெரித்துப் பார்த்துத் தானே காரியம் சாதிக்கிறான். சந்தர்ப்பங்களை நமக்குச் சாதகமாக்கிக் கொள்ள எத்தனை பம்மாத்து!

ஏதோ ஒரு மாயையில் - மயக்கத்தால் ஆட்கொள்ளப்பட்ட பேபிசிங்காவின் இரண்டாவது மைந்தன் சுது, கல்லூரி வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நோக்கத்தோடு பாடசாலையை நோக்கி உற்சாகத்தோடு நடந்தான். மாணவர்களிடம் தனது கருத்தைத் கூறியதும் சிலர் அவனை மொய்த்துக் கொண்டனர்.

"சுது இராணுவத்தில் சேரப் போகிறானாம்"

"பாவம் வீணாகச் சாகப் போகிறான்" என்றான் அவனது ஆப்த நண்பன் காமினி.

அவன் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு கல்லூரி அதிபரின் அறைக்குள் நுழைந்தான். அதிபர் சில வினாடிகளின் பின்னே சாவதான்மாக அவனை நிமிர்ந்து நோக்கினார்.

"சேர், நான் படிப்பை விடுவதாக முடிவு செய்துவிட்டேன். இராணுவத்தில் சேரப் போகிறேன்". அவர் அவனை பாராட்டுவார் என நம்பினான். அடக்கமான அவர் நெற்றியில் கழிகள் தோன்றி மறைய ஒருகணம் பார்த்தார். பின்னர் மெதுவாகக் கேட்டார்.

"எதற்காக"

அவன் தலையைக் குனிந்தபடி அடித்தொண்டையால் சொன்னான். "நாட்டுக்காக!"

...... மௌனம் சில நிமிட நேரம் நீடித்தது. சொன்னார். "நாட்டுக்கு என்ன ஆபத்து வந்தது?.. புலிகள் தங்களுடைய நாட்டைத்தான் கேட்கிறார்கள். நம்முடைய நாட்டின் மீது படையெடுக்கவில்லையே!"

அவன் மௌனமானான்.

"ம்!ம்! போய் வா" என்று சொல்லிவிட்டுத் தலை குனிந்தார். அவன் வீதியில் ஏறி நடந்தான். சிந்தனை குழம்பியிருந்தது. அப்போது அவனை ஒரு இராணுவ வாகனம் கடந்து சென்றது. உற்றுநோக்கியபோது, மூன்று சடலப் பெட்டிகள் மலர் கட்டங்களோடு காணப்பட்டன. சென்ற வாகனம் நின்று சுதுவின் ஒழுங்கையில் திரும்பியது.

சுது வேகமாக நடந்தான். சந்திக்குச் சென்று பார்த்ததும் அது தங்கள் வீட்டு வாசலில் நிற்பது தெரிந்தது. அங்கே சவப்பெட்டியொன்று இறக்கப்பட்டு அவனது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.


சனக்கூட்டத்தின் மத்தியிலே வீட்டாரின் அழுகுரல் முச்சந்தியில் மோதி ஊரில் பரவியது. சுதுவின் நடைவேகம் தளர்ந்தது. கால்கள் பின்னிப் பிணைந்தன. மூளையிலே மின்னல் வெட்டியது.சமாதானத்துக்கான போர் விளைச்சலின் அறுவடையை அவ்வூரில் விநியோகிப்பதில், அந்தச் சவங்காவி வாகனம் பம்பரமாகச் சுழன்று செயற்பட்டது. ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெந்நியுண்டு பயமில்லை மனமே- இந்த ஜன்மத்தில் விடுதலையுண்டு நிலையுண்டு!




மோட்டார் செல்கள் வெடிப்பதினால் எழும் இடியோசை. தானியங்கித் துப்பாக்கிகளில் இருந்து படபடவென எழும் வேட்டோசை. அதிரடிப்படை மரத்தில் இருந்து தாவி ஒரு விடுதலைப்புலி அணியைத் தாக்கிக் கைகலந்து மோதியபோது இந்த இரண்டோசையும் காற்றை நிரப்பின.

"இரண்டு பக்கமும் மாரிமழை போல வேட்டுக்களை ஒருவர் மீது ஒருவர் வாரி இறைத்தார்கள். ஆனால், சில நிமிட நேரத்தில் மிக நேர்த்தியான சீருடையில் இருந்த அதிரடிப்படை சாரம் கட்டிய, வெறும் காலோடும் பரட்டைத் தலையோடும் சண்டையிட்ட புலிகளை வெற்றி கொண்டார்கள். விடுதலைப் புலிகளின் முகாமுக்குள் உள் நுழைந்த அதிரடிப் படையினர் உறுமும் புலி பதித்த சிவப்பு நிறக் கொடியைப் பிடிங்கி எறிந்துவிட்டு அந்த இடத்தில் சிறீலங்காவின் தேசியக் கொடியை நாட்டினார்கள்."

"களத்தில் எங்கு பார்த்தாலும் இறந்துபோன தீவிரவாதிகளது சடலங்கள். அதிரடிப்படைக்கு எந்த விதமான இழப்பும் இல்லை. புலிகளை வெற்றிகொண்ட படையினர் ஒரு இராணுவ வாகனத்தில் பாய்ந்து ஏறி தங்கள் அடுத்த இலக்கை "புலிமுகாம் " நோக்கிப் பயணப் பட்டார்கள்."

இந்தச் சண்டை நடந்தது பற்றி எந்தப் பத்திரிகையிலும் செய்தி வரவில்லை. இந்தச் சண்டை எங்கே-எப்போது நடந்தது என்று நீங்கள் ஆவலோடு கேட்பது காதில் எனக்கு விழுகிறது. மேலும் படியுங்கள். அப்போதாவது மர்மம் துலங்குகிறதா என்று பார்ப்போம்.

அதிரடிப் படையினர் தங்கள் சாகசத்தைக் காட்டிவிட்டு தூசிப்படலத்தில் ஓடி மறைந்தபோது திகைத்துப் போய் நின்ற கூட்டத்தினரிடம் இருந்து பலத்த கையொலி எழும்பியது. இளம் குமாரர்களையும் குமரிகளையும் இராணுவத்தில் சேருவதை ஊக்குவிக்கு முகமாக இராணுவம் இரண்டு மைல்கள் பயணம் செய்து கிங்கரண கொடவுக்குப் போனதன் கிளைமக்ஸ் காட்சியைத்தான் இப்போது பார்த்தீர்கள்.

"இப்படி தேசபக்தியை, தீரத்தை, அதீத பராக்கிரமத்தை வெளிப்படுத்தும் கூத்து கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக நாட்டின் பல பாகங்களிலும் நடாத்தப்பட்டு வருகிறது. அதன் எதிர்பார்ப்பு என்னவென்றால் இப்படியான கூத்து மூலம் இளைஞர்களையும் யுவதிகளையும் சாரிசாரியாக ஆட்சேர்க்கும் கூடாரத்துக்குக் கொண்டுவருவதே.

"இப்படியான கூத்தின்போது தரையின் ஒரு மூலையில் ஒரு அடைப்பு இருக்கும். அங்கேயுள்ள மேசையில் இராணுவ கோப்பரல் ஒருவர் திறந்த இடாப்போடு காத்திருப்பார். இராணுவத்தில் சேர விரும்பும் ஆண்களும் பெண்களும் நடந்து சென்று தங்கள் பெயரைக் கொடுக்கலாம். துரதிஸ்டவசமாக, இந்தச் சின்னப் பட்டினத்தில், இந்த கூத்தின் முடிவில் ஐந்து பேர் மட்டும் தங்கள் பெயர்களை கொடுத்தார்கள்.

இதை அடுத்து, இந்தக் காட்சியைப் பார்க்க அங்கு திரளாகக் கூடி யிருந்தவர்களைப் பார்த்து உரையாற்றிய நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளர், விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரசின் கைகளைப் பலப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்தார். "இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர உங்களது ஒத்துழைப்பு எங்களுக்குத் தேவை. விடுதலைப் புலிகள், குடும்பத்துக்கொரு பிள்ளையை கட்டாயப்படுத்தி தங்கள் படையில் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். ஆனால், நாங்கள் அப்படி எதையும் செய்யவில்லை. இராணுவத்தில் சேருமாறு உங்கள் பிள்ளைகளை ஊக்குவிக்குமாறு மட்டும் கேட்டுக்கொள்கிறோம்."

வேறு இடங்களில் நடாத்தப்பட்ட இப்படியான கூத்துக்களின் பெறு பேறுகளும் இவ்வாறுதான் அமைந்து இருந்தன. உதாரணமாக-புத்தளத்திலும் இராணுவத்தில் சேர முன்வந்தோர் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. தேசபக்தனாக மாற விரும்பாத ஒரு இளைஞன் சொன்னான்: "கொழும்பைப் பாதுகாப்பதற்கு நான் சாகத் தயாரில்லை" மாதச் சம்பளம் முழுசாக 7,000 என்று ஆசை காட்டியதும் பலிக்கவில்லை.

தென்னிலங்கையில் இராணுவத்திற்கு ஆட்சேர்க்க என்னென்ன வித்தைகள் காட்டப்படுகின்றன. என்னென்ன ஆசை வார்த்தைகள் சிங்கள மக்களுக்கு ஊட்டப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டவே Sunday Leader (10-5-98) பத்திரிகையில் அதன் பத்திரிகையாளர் மார்வான் மாக்கன் மரைக்காயர் "மோத மறுக்கும் சிப்பாய்கள் " (Troopers who refuse to charge) என்ற தலைப்பில் எழுதியிருந்த கட்டுரையின் ஒரு பகுதியை தமிழில் அப்படியே தந்துள்ளேன். நான் மொழி பெயர்ப்பில் எனது சொந்தக் கை வண்ணத்தைக் காட்டி அதற்கு

**- நக்கீரன் -**

மெருகூட்டி இருக்கலாம் என்ற சந்தேகத்தை போக்க கட்டுரைப் பகுதியின் ஆங்கில மூலத்தையும் படிப்பதற்கு கீழே தருகிறேன்.

Here, for instance, is what one reporter filed for her paper after witnessing such an entertaining spectacle last August.

"Deep thudding sounds from exploding mortar shells and the sharp chatter of automatic guns fill the air as military commandos swing down from a tree and take on a bunch of LTTE militants in hand-to-hand combat.

"Both sides mercilessly rain bullets on each other but within minutes, the smartly-dressed commandos have overpowered the sarong-clad, unshod, unkempt Tigers. They enter the LTTE camp, uproot the red flag with the insignia of the roaring tiger and plant the Sri Lankan national flag in its place.

"Strewn all around are bodies of militants with the commandos suffering no casualties. Their task accomplished, they jump into a military truck and are on the way to their next mission.

"Completely awe-struck, the crowds break into loud applause as the commandos disappear in a cloud of dust at the end of their little pantomime, the climax to a two-hour long military tattoo in Hingarangoda, held to inspire young men and women to join the armed forces.

"For over a month now, such tattoos have been held in various parts of the country in the hope that the mix of patriotism, adventure and machismo portrayed in these shows will bring youngsters to the recruitment hut in droves.

"At every tattoo, there is a small enclosure in one corner of the ground where men and women can walk in and give their names to the corporal waiting at the desk, his register open. Unfortunately, in this small town, at the end of the tattoo, only five men gave in their names.

"(And that, after) the master of the ceremonies exhorted the townspeople, who had turned up in huge numbers for the show, to strengthen the hands of the government in its fight against the LTTE. "We require your support to end the war. The LTTE conscripts at least one child from every family, but we are not doing that, we only want you to encourage your children to join the armed forces," he said.

The accounts were the same at other tattoos, too. In Puttalam, for instance, where the numbers who signed up were equally paltry, one young boy, in declining to be a patriot, said: "I don't want to die to protect Colombo." Clearly, even the 7,000 rupees offered as a monthly salary was not an attractive carrot.

இப்போது இராணுவம் சிங்களப் பள்ளி மாணவர்களை வலை வீசிப் பிடிக்க மேற்கண்ட தந்திரோபாயங்களை கடைப்பிடித்து வருகிறது. கிராமங்க ளுக்குப் பதிலாக, பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் இராணுவம் முற்றுகை யிடுகிறது.

சந்திரிகாவின் அமைச்சர்களில் ஒருவரான மங்கள சமரவீர பள்ளிக்கூட மாணவர்களை இராணுவத்தில் சேர்க்க அரசு முயற்சிக்கவில்லையென்று முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள் மறைத்தாலும் இராணுவ தளபதி றோகன் தலுவத்த பள்ளி மாணவர்களை படையில் சேர்க்கும் முயற்சி நடைபெறுவதை வெளிப்படையாக அறிவித்துள்ளார்.

இந்த முயற்சிக்கு சிங்களப் பத்திரிகை நிருபர்களின் ஒத்துழைப்பை இராணுவ தளபதி கோரியுள்ளார்.

அவரைப் போலவே துணைப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் சிங்களப் பத்திரிகை நிருபர்களை அழைத்து அவர்களது ஒத்துழைப்பைக் கோரியுள்ளார்.

ஓராண்டு கழிந்த நிலையில் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை வன்னி மண்ணில் புதையுண்டு போய்க்கிடக்கிறது.

விடுதலைப் புலிகளின் மின்னல் வேக அகோர எதிர்த் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாது "தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் "என்று சொல்லிக் கொண்டு சிங்கள இராணுவத்தினர் ஆயிரக்கணக்கில் யுத்தகளத்தை விட்டு புறமுதுகு காட்டி ஓடி மறைந்துவிட்டார்கள். மொத்தம் 15,000 பேர் ஓடிவிட்டதாக இராணுவ தளபதியே வெட்கத்தை கக்கத்தில் வைத்துக் கொண்டு சொல்லியிருக்கிறார்.

மன்னிப்புக்கு மேல் மன்னிப்புக் கொடுத்தும் பெரும்பாலோர் மீண்டும் இராணுவத்தில் சேரமறுத்து வருகிறார்கள். 5,000க்கும் மேலானவர்கள் வெளிநாட்டுக்கு ஓடித் தப்பிவிட்டார்கள்.

பிடித்த இடங்களைப் புலிகளிடம் இருந்து தப்ப வைக்க இன்னும் 15,000 சிப்பாய்கள் தேவை. இது சாத்தியப்படாவிட்டால் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை முன்னெடுப்பது கடினம் என இராணுவ தளபதி அழாக்குறையாக வாய்விட்டுச் சொல்லி வருகிறார்.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தபோது அல்லது அதற்கு முந்தி அல்லவா இந்த ஆட்பற்றாக் குறைபற்றிய ஞானோதயம் ஏற்பட்டிருக்க வேண்டும்? இப்போது காலம் கடந்து பாதிக் கிணற்றை தாண்டும்போது இந்த ஞானம் வந்து என்ன பலன்?

உண்மை என்னவென்றால் சிங்கள இராணுவ தளபதி றோகன் தலுவத்தையும் துணைப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் விடுதலைப் புலிகளைப் பற்றிப் போட்ட கணக்குப் பிழைத்துவிட்டது.

இதைத் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் தனக்கே உரித்தான பாணியில் அச்சொட்டாகச் சொல்லியிருக்கிறார். "ஜெயசிக்குறு சமர் ஆரம்பமாவதற்கு முன்னர் சிங்கள அரசும் சிங்கள இராணுவத் தலைமையும் எமது படை பலம் பற்றியும், போராடும் உறுதி பற்றியும் ஒரு தவறான மதிப்பீட்டை வைத்திருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து நாம் மேற்கொண்ட தந்திரோபாயப் பின் நகர்வையும், 'எடிபல' இராணுவ நடவடிக்கைக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்காததையும் அடிப்படையாக வைத்து புலிகள் இயக்கம் பலவீனம் அடைந்துவிட்டதாக சிங்கள அரசு கருதியது. இந்தத் தவறான கணிப்பீடு காரணமாகவே ஜெயசிக்குறுவிற்கு குறுகிய காலக் கெடுக்களை வகுத்து இராணுவத் தலைமை தலைகுனிய நேரிட்டது.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை- சனாதிபதி சந்திரிகா, துணைப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை, இராணுவ தளபதி தலுவத்தை இவர்கள் மூவரையும் பொறுத்தளவில் கௌரவப் பிரச்சினையாகப் போய்விட்டது.

ஓடிப் போன இராணுவத்தினரை எப்படியும், எப்பாடு பட்டும் தேடிப் பிடித்து

தொடர்ச்சி 11ம் பக்கம்.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்தியிரண்டு

(தொடர்ச்சி)



இம்முறை ஏதோ அமானுஸ்யமான ஒன்று நிகழ்வது உணரப்பட்டது. எனெனில் யேர்மனியருக்கு வயோதிபர்களும் மிகவும் வயது குறைந்தவர்களுமே தேவையாயிருந்தது. வயதானவர்களை விரட்டிக் கொண்டும் குழந்தைகளைத் தேடிக்கொண்டும் யேர்மனியர்கள் வரவும், சேரியைத் திகில் சூழ்ந்து கொண்டது. அதிகமான குழந்தைகள் தங்கள் தாய்மாரின் கரங்களில் இருந்து பறித்தெடுத்துச் செல்லப்பட்டனர்.

சுற்றி வளைக்கப்பட்ட அனைவரும், உம்லாக் பிளாறீஸ் இல் கூட்டப்பட்டு, நீண்ட சரக்கு வண்டிகள் ஆயத்தமாகக் காத்துக் கொண்டிருந்த ஸ்ராவ்கி வீதி புகையிரதப் பாதையருகே கொண்டு செல்லப்பட்டனர். அதிர்ச்சியடைந்த திகைப்படைந்த மக்கள் வந்து குவியத் தொடங்கினர். பிள்ளைகளுக்காக அவதிப்பட்ட பல பெற்றோர்கள், துப்பாக்கி முனையில் தடுத்து நிறுத்தப்பட்டனர். ஜெர்மனியர்கள் பல தடவைகள் கொல்வதற்காகவே துப்பாக்கியால் சுட்டனர்.

பிள்ளைகள் பாடிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் இருந்தனர். யேர்மன் காவலாளிகள் அவர்களைக் கிராமப்புறத்துக்கு ஒரு உல்லாசப் பயணம் அழைத்துச் செல்லப் போவதாக உறுதி கூறியிருந்தனர். அவர்களில் அதிகமானோர் சேரிக்கு வெளியே போயிருக்கவில்லை ஆதலால் அவர்கள் வாழ்வில் இது முக்கிய நிகழ்வாகும்.

இந்தப் புகையிரதத் தொடர் ட்ரெப்லிங்கா நோக்கி அசைந்தபோது "இறுதித் தீர்வு" நெருங்கியிருந்தது.

*ரிஸ்யா பியாப் – 1942.*

இரண்டு வாரங்களுக்குப் பின் டொவ் லண்டவ் சப்றொவ்ஸ்கா 99 இல் இருந்த வன்டாவின் வீட்டிலிருந்து திகைப்பூட்டும் செய்தியொன்றோடு வந்திருந்தான். அந்தச் செய்தியில் ரிஸ்ஸா பியாப் அன்றும், பின் தொடர்ந்த ஐந்து சுற்றிவளைப்புகளிலும் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் எல்லோரும் ட்ரெப்லிங்கா என்னும் இடத்தில் விசவாயு அறைகளில் கொல்லப்பட்டார்கள் என்பது குறிப்பிடப்பட்டிருந்தது. போலந்தின் மற்றைய சேரிகளில் இருந்து வந்த செய்திகள் வேறு இப்படியான முகாம்களும் இருப்பதை அறிவித்தன. கிராக்கோவ் பகுதியில் பெல்செக், செல்ம்னோ ஆகிய முகாம்களும், லுபின் நகரமருகே மெயிடனக் முகாமும் இயங்கிக் கொண்டோ, இயங்க ஆயத்தமாகிக் கொண்டோ இருந்தன. இன்னும் மேலதிகமாக ஒரு டசின் முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதுபோல் தெரிவதாக அந்த அறிக்கைகள் குறிப்பிட்டன.

விசவாயு அறைகளில் தொகையாகக் கொலை செய்வதா? அது நடக்கக்கூடிய ஒன்றாகத் தெரியவில்லை. மண்டெக் மீட்பாளர் குழுத்தலைவன் என்ற கோதாவில் மற்றைய சியோனிஸ்ட் குழுக்களுடன் கலந்தாலோசித்து, யூதர்களைப் பொதுவாக எழுச்சி கொள்ளவும், சுவரைக் கடந்து வெளியேறவுமான கூட்டுப் பணிப்புரை ஒன்றை விடுத்தனர்.

இந்தப் பணிப்பு உணர்ச்சி உந்துதலில் விடுக்கப்பட்டதே தவிர, பிரயோகிக்கக்கூடிய ஒன்றாக இருக்கவில்லை. எதிர்த்துச் சண்டையிடுவதற்கு யூதர்களிடம் ஒன்றும் இருக்கவில்லை. இதைவிடக் கட்டாய சேவை பட்டாலியன்களின் அடையாள அட்டைகள் வைத்திருந்த ஒவ்வொருவரும் சீவித்திருப்பதற்கு அதுதான் ஒரே மார்க்கம் எனக் கருதிக் கொண்டிருந்தனர்.

இங்கு ஒரு எழுச்சியை நிகழ்த்த முடியாததற்குக் காரணம் சேரி தவிர்ந்த வெளியிடங்களில் அதற்கு ஆதரவு இல்லாதிருந்ததே. பிரான்சின் விச்சி அரசானது பிரென்சு, யுதர்களைக் கையளிக்க வேண்டும் என்ற யேர்மன் பணிப்புரையை முற்றாக நிராகரித்திருந்தது. ஒல்லாந்தில் எல்லோரும் ஒருமித்து தங்கள் நாட்டு யூதர்களை ஒளித்து வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வோடிருந்தனர். டென்மாக்கில், அரசர், யேர்மனிய கட்டளைகட்கு அடிபணியாததோடு, டென்மார்க்கியர்கள் தங்கள் நாட்டின் முழுயூத குடி மக்களையும் சுவீடன் நாட்டுப் பாதுகாப்புக்குள் அனுப்பி விட்டனர்.

போலந்து மக்கள் இனப் படுகொலைகளுக்குச் சம்மதம் தெரிவிக்காவிட்டாலும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. சிலர் இதை ஒத்துக் கொள்ளாவிட்டாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. மிகச் சில போலந்துக்காரர்களே தப்பிய யூதர்கட்குப் புகலிடமளித்தனர்.

யூத சேரியினுள்ளே, அமைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு குழுவும் வெவ்வேறு சித்தாந்தங்களைக் கைக்கொண்டனர். மதசார்பானவர்களும், தொழிற் சங்கக்காரரும் வாதாடிக் கொண்டனர். யூதர்களுக்கு விவாதம் செய்வதென்றால் நல்ல விருப்பம். சேரி வாழ்க்கையில் வாய்ச் சண்டையிடுவதும், விவாதம் செய்வதும் எப்போதுமே விருப்பமான பொழுதுபோக்குகளாகும். ஆனால், இப்போதோ பேரழிவின் காலம் வந்துவிட்டது. மண்டெக்கின் மீட்பாளர் குழுவும், மற்றைய பலதரப்பட்ட குழுக்களும் இணைந்து ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட தலைமையை நிறுவினர். இப்படியாக ஒன்றிணைக்கப்பட்ட அமைப்பு இஸட்.ஓபி. (Zob) என்ற முதலெழுத்துக்களைக் கொண்டு விளங்கியது. மற்றைய யூதர்களை காக்கும் மகத்தான பொறுப்பும் இதற்கு இருந்த்து.

சப்றொவ்ஸ்கா 99இல் இருந்த வன்டாவின் வீட்டுக்கு ஒன்றுக்குப் பின் ஒன்றாக டொவ் பயணங்களை மேற்கொண்டிருந்தான். கழிவு வாய்க்கால்களுடான ஒவ்வோர் பயணத்தின் போதும், உதவியும் ஆயுதங்களும் கேட்பதான இஸட்.ஓ.பி.யின் வேண்டுகோள்களை போலந்து தலைமறைவுப் போராளிகட்கு கொண்டு சென்றான். ஆனால், அதிகமான செய்திகள் பதிலேதுமில்லாமலே போயின. கிடைத்த பதில்களும் தட்டிக்கழிப்பன போலிருந்தன.

அந்தப் பயங்கரமான முதுவேனிற்காலம் முழுவதும் யேர்மனியர்கள் தொடர்ந்து ரெப்லிங்காவுக்காக யூதர்களைச் சுற்றிவளைத்துச் சென்றனர். இஸட். ஓபி.யோ முற்றான அழிவைத் தவிர்க்க இயன்ற முயற்சிகளை எடுத்து வந்தனர்.

புரட்டாதி மாத முற்பகுதியில் ஒருநாள். ஒரு ஆபத்தான பயணம் ஒன்றை டொவ் வார்சோவிற்குள் மேற்கொண்டான். வன்டாவின் வீட்டை விட்டு கிளம்பிய பிறகு, நாலு குண்டர்கள் இவனைக் கண்டு, ஒரு சந்தினுள் விரட்டி வந்து யூதனல்ல என்று காட்டும் அவன் அடையாளப் பத்திரங்களைக் காட்டக் கட்டளையிட்டனர். டொவ்வுடைய முதுகு குறுக்குச் சுவரோடு ஒட்டிக் கொண்டிருந்தது. அவர்கள் மிக அருகில் நெருங்கியதும் தான் கையோடு எடுத்து வந்திருந்த கைத் துப்பாக்கியால் ஒருவனைச் சுட்டுக் கொன்றுவிட்டு மற்றவர்களைப் பயத்தால் ஓடப்பண்ணினான். பின்பு பாய்ந்தோடிச் சென்ற அவனைக் கழிவு நீர் வாய்க்கால்களின் பாதுகாப்பு அரவணைத்துக் கொண்டது.

'மீட்பாளர் குழு' தலைமையகத்தின் அப்பையன், காலந் தாழ்த்திச் செயல்படும் அதிர்ச்சியால் அழத் தொடங்கினான். மண்டெக் அவனைத் தேற்ற முயற்சித்தான். தன் சகோதரன் அருகில் பாசத்தையும், மகிழ்ச்சியையும் எப்போதுமே டொவ் உணர்ந்திருக்கிறான். மண்டெக் இப்போது இருபத்தொரு வயதானவனாக இருந்தாலும், மெலிந்தும், எப்போதும் களைப்படைந்த தோற்றத்துடனும் காணப்பட்டான். அவன் ஒரு நல்ல தலைவனாகச் செயல்பட்டு வந்ததோடு, எல்லையை மீறி தான் அளவுக்கு மீறிக் களைப்படைந்து போகும்வரை வேலை செய்து வந்தான். அவன் மீட்பாளர் குழுவைச் சிதறவிடாமல் வைத்திருந்ததோடு, அவர்களின் போராட்ட உணர்வுகளை மழுங்க விடாமலும் பார்த்துக் கொண்டான். இரண்டு சகோதரர்களும் மெதுவாகக் கதைத்துக் கொண்டனர். டொவ் அமைதியடைந்தான். மண்டெக் டொவ்வின் தோளை அரவணைத்தபடி இருவருமாகத் தங்கள் வீட்டை நோக்கிப் போயினர். சில வாரங்களில் வரவிருந்த றுத்தின் குழந்தையைப் பற்றி மண்டெக் இப்போது கதைத்தான். மாமாவாகப் போவது எவ்வளவு உன்னதமான வாய்ப்பு என்பது பற்றியும் அவன் டொவ்வுக்குக் கூறினான். மீட்பாளர் குழுவின் எல்லா அங்கத்தவர்களும் அந்தக் குழந்தைக்கு மாமாமாரும் மாமிமாருமாக இருப்பார்கள். ஆயினும் டொவ்தான் உண்மையான மாமாவாக இருப்பான் என்றும் கூறினான். அவர்கள் குழுவில் பல திருமணங்கள் நடைபெற்று மீட்பாளர் குழுவின் புதிய அங்கத்தவர்களான மூன்று குழந்தைகள் ஏற்கனவே பிறந்திருந்தனர்.

**லியோன் யூறிஸ்**

**தொடரும்...**

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் உங்கள் சிந்தனையில் எழும் கருத்துக்களை கவிதை வடிவில் தாருங்கள். உங்கள் ஆக்கங்களை **31- 07 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## நெஞ்சு பொறுக்குமா?

**கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:**

**'Kalathil',**

**Eelam House, 202 Long Lane, London SE1 4QB.**

www.tamilarangam.net



## இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு. வள்ளுவத்தில் படித்ததுண்டு. வள்ளுவர் கண்ட அந்த இலக்கணத்திற்கு இரண்டாயிரம் ஆண்டுகளின் பின் இலக்கியம் வகுத்தவர்கள் தமிழீழக் கரும்புலிகள்.

தான் அன்பு செய்பவர்க்காக தன் உயிரையே கொடுப்பதை விடவாழ்க்கையில் உயர்ந்தது எதுவுமே இல்லை என யேசு கூறியதாக நற்செய்தியில் கேட்டதுண்டு. இதன் வாழ்வியல் உதாரணத்தை கரும்புலிகளின் தோற்றத்தில் நான் உலகு கண்டு கொண்டது.

கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்ற தத்துவம் பேசப்பட்டதுண்டு. அதற்கு அர்த்தம் கொடுத்தவர்கள் இந்தக் கரும்புலிகள்.

சாவு மனிதனை அழித்துவிடும் என்ற கருத்தை மாற்றியமைத்து சாவால் மனிதன் அழிவற்ற பிறப்பெடுப்பான் என்பதை உலகுக்கு நிரூபித்து நிற்பவர்கள் நம் கரும்புலிகள்.

கரும்புலிகளின் தோற்றம் தன்னலமற்ற பேரன்பின் பிரவாகம். தம் இன்னுயிரையே தன்னினத்திற்காகத் - தன் தேசத்தின் விடுதலைக்காக ஆயுதமாக்கும் நிகரற்ற பேரன்பு. தான் வாழ தன் இனத்தைப் பயன்படுத்துகின்றவர்கள் நிறைந்த உலகில் தன் இனம் வாழத் தன்னையே உருக்குலைக்கும் உறுதியின் உறைவிடங்கள் இந்தக் கரும்புலிகள். சாவால் தமிழீழ மக்களை இனஅழிப்பு செய்யலாம் என்ற சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு அந்தச் சாவையே ஆயுதமாக்கி தம் சாவுக்குத் தேதிகுறித்து அதை எதிரியின் பேரழிவாக்கிய வீரத்தின் விளைநிலங்கள் இந்தக் கரும்புலிகள்.

ஆம்! தெய்வம் காத்து நிற்க மனிதன் வாழ்கிறான் என்பது ஆன்மீகத்தின் நம்பிக்கை. அதுபோல இந்த கரும்புலிகள் காவலில் தமிழீழம் வாழ்கின்றது. அதனால் தமிழீழம் யாருக்கும் ஒரு நாளும் இனிப் பணியாது என்பது உறுதியிலும் உறுதி. இந்த அரசியல் யதார்த்தத்தை உலகுக்கு வெளிப்படுத்தும் தினமாக ஆடி 5ம் நாள் விளங்குகின்றது. தமிழீழத் தேசிய இனம் வையத்தே வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வமாகிவிட்ட கரும்புலிகளை இத் தினத்தில் வணங்குகின்றது.

அதேவேளை இந்த தெய்வீக உணர்வு ஆயிரம் ஆயிரம் கரும்புலிகளைக் கருக்கொண்டெழவைத்துள்ளது. இதனால் கரும்புலிகள் அழியவில்லை. தமிழீழப் போராட்டத்தினை முன்னெடுக்கும் உந்து சக்தியாக இன்றும் என்றும் திகழ்கின்றனர்.

எல்லைப்படுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கி விடலாம் என நினைத்த சிங்களப் பேரினவாதிகளுக்கு மரண அடி கொடுத்து எல்லையற்ற யுத்தம் ஒன்றாக தமிழீழப் போராட்டத்தை மாற்றிய பெருமைக்குரியவர்கள் இந்த கரும்புலிகள். இதனால் சிங்கள சிறிலங்கா தனது ஆளணிப் பலம் கொண்டோ அல்லது ஆயுதப் பலம் கொண்டோ தமிழர் தாயகத்தின் எந்தப் பிரதேசத்தையாவது ஆக்கிரமித்து தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்ற நிலை கள யதார்த்தமாக்கப்பட்டுள்ளது.

கரும்புலிகளின் துணையுடன் கூடிய போராட்டத்தால் ஆக்கிரமிப்பாளன் கொண்டு வந்து குவிக்கும் ஆயுதங்கள் விடுதலைப்புலிகள் வசமாகி விடுதலைப்புலிகளின் இராணுவ வலிமை மேலோங்குவதும் சிங்களச்சேனை அழிக்கப்படுவதும் தான் ஆக்கிரமிப்பின் பெறுதியாகும் என்பது உலகுக்கு நன்கு உணர்த்தப்பட்டுள்ளது. இதற்கு ஜயசிக்குறு யுத்தக்களம் இன்றும் நல்ல உதாரணமாகத் திகழ்கிறது.

இவ்வாறு தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றிபெறுவதற்கு தம்மையே அர்ப்பணிக்கும் கரும்புலிகள் பாசமற்ற உறவுகளற்ற உருவங்கள் அல்ல. இனத்தின் மேல் கொண்ட பற்றினால் தம் பாசங்களை நேசங்களைத் துறக்கத் துணிந்த தெய்வீகப் பிறவிகள்.

இவர்கள் வாழும் காலத்தில் நாமும் வாழ்கின்றோம் எனப் பெருமை கொள்ள எமக்கு எந்த அளவுக்கு உரிமையுண்டோ அந்த அளவுக்கு இவர்கள் தம் இன்னுயிர் அர்ப்பணிப்புக்களால் முடித்து வைக்கப் புறப்பட்ட இலட்சியத்திற்கு உழைக்க வேண்டிய கடமையும் நமக்குண்டு.

ஆம்! நெருங்கிக் கொண்டிருக்கும் நம் தமிழீழத் தாயகத்தை விரைவில் அங்கீகரித்து சிறிலங்கா தமிழர்களை இனஅழிப்பு செய்வதற்கு உறுதுணையாக உள்ள ஆயுத வழங்கல்களையும் - இராணுவப் பயிற்சிகளையும் நிறுத்தும்படி சர்வதேச உலகை தொடர்ந்தும் தொடர்ந்தும் வற்புறுத்துவதும். விடுதலை விரைவு பெறத் தமிழீழ மக்களின் தேசிய இயக்க விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு உடன் உதவிகளை காலதாமதமின்றி இயலுமான எல்லாவழிகளிலும் செய்வதும்

நம்மால் செய்யக் கூடிய- செய்ய வேண்டிய கடமைகளாக உள்ளன. இவைகள் இரண்டிலும் நாம் எவ்வளவு தூரத்திற்கு விரைவாக செயற்படுகின்றோமோ அவ்வளவு தூரத்திற்கு தமிழீழ விடுதலை விரைவு பெற்று கரும்புலிகளின் கனவுகள் நனவாகி தமிழீழ மக்கள் பாதுகாப்புடன் கூடிய அமைதியைப் பெறுவர். கரும்புலிகள் தினத்தில் இந்தச் செயற்பாடுகளில் நாம் முழுமனதுடன் ஈடுபடுவோம் என உறுதி பூண்டு தேசத் தலைவர் மேதகு பிரபாகரன் தலைமையில் தமிழீழ மக்கள் நடாத்தும் விடுதலைப் போராட்டம் யாராலும் வெல்லப்பட முடியாத உறுதிமிக்கது என்பதற்கு கரும்புலிகள் உயிர்ச்சான்றுகளாக உள்ளனர். ஆகவே காலதாமதங்களை ஏற்படுத்தி சிறிலங்காவின் பகிரங்க இனஅழிப்புக்களுக்குத் துணைபோகாமல் தமிழீழத் தேசிய விடுதலைப் புலிகள் இயக்கத்தை அங்கீகரித்து சிறிலங்காவின் மனிதப் படுகொலைகளுக்கு. மனிதாயத்துக்கு எதிரான குற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து எமது மக்களை வாழவிடுங்கள் என உலகை ஒரே குரலாகக் கேட்போமாக!

அன்பின் ஆசிரியர்




அன்னை மடியிழந்தோம்
ஆனந்த வாழ்விழந்தோம்
இனவெறி இன்னலினால்
ஈன்ற பொன் நாடிழந்தோம்
உலகோர் உதவிக்கு வரவில்லை
ஊனமாய் போனோமா? மானமிழந்தோமா?
எழுந்தோம், எதிரிகள் வீழ்ந்தனர்
ஏற்றமிகு ஈழ விடியலை வென்றெடுக்க!

- கண்ணன், பிரான்ஸ்.

அடியுதைபட்டு அல்லல்கள் உற்று
குடிநிலமிழந்து கூடிமகிழ்ந்த வாழ்வினைமிழந்து
அடிமைகளாய் அகதிகளாய் ஆனதுபோதும்
கொடிய பகைவனைக் கொன்றே ஒழித்து
விடியலை வென்றெடுக்க விரைந்த புலிவீரர்
அடியினைத் தொடர்வோம்
அணியெனத் திரள்வோம்.

-வட் டூர். குணபாலன் கோபிகா, பரிஸ்.

சிங்களப் பேய்களை எங்கள்
மண்ணில் இருந்து விரட்டியடிக்க...
செங்களம் ஆடிடும் எங்கள்
தோழர்களின் கரங்களைப் பலப்படுத்த
மங்களம் எங்கள் மண்ணின்
மக்களின் மனங்களில் பொங்கிவழிய
தாயகத்தின் விடியலை வென்றெடுக்க...
அந்நிய தேசத்தில் வாழும் தமிழினமே கைகொடுப்போம்.

-புங்கையூர் மதி.

## விடியலை வென்றெடுக்க...

கண்ணீராலும் செந்நீராலும்
நனைகின்றது நம் தேசம்,
நம் இனம் வாழ்ந்த நிலமோ
அந்நியன் கைகளில்–சுடுகாடாய்
நம் இனத்தின் துயரைச் சொல்லிட
வார்த்தைகள் போதாது....
தமிழினம் சுதந்திரமாய் வாழ்ந்திட
விடியலை வென்றெடுப்போம் வாரீர்.

- திருமதி. கோமதி ரவி, யேர்மனி.

ஓ.. என் இனமே
எவனோ போடும் பிச்சையில்
எத்தனை காலம் வாழும் எண்ணம்
ஒரு கணம் உன் தேசத்தை திரும்பிப்பார்.
விடுதலைக்கு, உடன்பிறப்புக்கள் கொடுக்கும் விலை..?
அதில் குளிர்காயாது உன் பங்கை செய்துமுடி
எங்கள் விடுதலையை வென்றெடுக்க
இன்றே செய்வாய் உனது பணி.

- நீர்வேலியூர் யசோ டென்மார்க்.

www.tamilarangam.net



# பொக்கை வாயானது ஜயசிக்குறுய் - இன்று பக்கவாதத்திலே .... ஜயசிக்குறுய்

உலைக்களம்

வியாசன்

"சிக்குறுய் சிக்குறுய் ஜயசிக்குறுய் - வந்து
சில்லெடுக் கின்றது ஜயசிக்குறுய்
பொக்கை வாயானது ஜமிக்குறுய் - இன்று
பக்கவா தத்திலே ஜயசிக்குறுய்."
13-05-1998 இன்று
ஜயசிக்குறுயிக்குப் பிறந்த நாளல்ல-
இறந்த நாள்.
ஈழத் தமிழனே!
இன்றுனக்கு விடிந்தது காலைமட்டுமல்ல
வெல்வாயென்ற நம்பிக்கையின் துளிர்ப்புந்தான்.
இன்றுன் முற்றத்தில் பூக்கள் மட்டும் மலரவில்லை.
புதியவாழ்வொன்றின் சிரிப்புமென்றறிவாய்.
அடிவற்றிவிடுமென்ற கிணறொன்றின் ஆழத்தில்
பீறிட்டெழுந்தது புதிய ஊற்று.
மூச்சடங்கிப் போகாதென்ற முனைப்பிது.
நம்பிக்கை நாற்றுங்கால் போட்ட நாளின்று.
இனி அழுதது போதுமென்று எழுவாய்.
நிலவைப் பிடித்து நெஞ்சிற்சூட நிமிர்வாய்.

முகிலையெடுத்து முகம்துடைத்துக் கொள்க.
காற்றைப்பிடித்துக் கயிறாகத் திரித்து
ஏற்றக் கொடியாக்கி இறை.
படுத்திருக்கும் பழையபாயைச் சுருட்டி எறிந்துவிட்டு
நட்சத்திரங்களை எடுத்தடுக்கி மெத்தையிடுக
இன்றுனக்கு சந்தோச நாளொன்றின் ஜனனம்.
வன்னிமரங்களுக்கு வளைகாப்பு.
அகதிக்குடிசைகளுக்கு ஆரோகண உற்சவம்.
குழாய்க்கிணறுகளுக்கு கும்பாபிசேகத் தினம்.
உன்பிள்ளைகள் உனக்குப் பெருமை சேர்த்தனர்.
நாகாசுர சங்காரத்திற்குத் தேதிகுறித்த நாளின்று.
கண்டிவீதியிலேறிக் களிப்புற்று
வென்றிலர் பகைவர்களென்று
பறவைகளுக்குப் பாடல் கற்றுக்கொடு.
எத்தனை காலமாய் இழிவுற்றிருந்தாய்.
குற்றேவல் செய்வதே குலப்பெருமையெனக்
கற்பனைக்குச் சேலைகட்டி
கண்ணாடி முன்நின்று களித்தாய்.
எச்சிற்படிகம் சுமந்து இன்புற்றாய்.
ஆள்பவன் எவனெனினும் அவனுக்கடங்கி
காலடியில் கைகூப்பித் தொழுதாய்.
தலைநிமிர வழியற்றுத் தாழ்ந்திருந்த உனக்கு
பெருமை வந்தடைந்தது.
நாயென்றுன்னைக் பேசிய நாவுகள்
புலியென்று உன்னைப் போற்றியதே! யாரால்?
புறமொதுக்கித் தாழ்வாரத்தில் போட்டிருந்த உன்னை
நீயும் மனிதனென நிமிர வைத்தவர் எவர்?
பிரபாகரன்!
புலிகள்!
உன்பிள்ளைகள் - இவர்கள்தான்.
ஒப்பனையில் மயங்கி உறங்கிக்கிடந்தவனே!
இன்றுனக்கு எழுச்சிநாள்.
இற்றைவரையான வரலாற்றில்
இன்றுதான் உனக்கு இனியநாள்.
உன்னாலும் முடியுமென நீயே உணர்ந்தநாள்.
வேரறுத்துன்னை வெளியே கலைத்துவிட்டு
ஊருக்குள் புகுந்தனர் அசுரர்.
உரச்சாக்குமட்டும் உனக்கு உறவாச்சு.
மரத்தடிமனிதராய் தமிழர் மாறினர்.
எதிர்காலம் சூனியமாச்சு.
இருளிற் கிடந்தன உறவுகள்.
ஓடிய இடத்திலிருந்தும் உன்னைக் கலைப்பேனென
சந்நதம்கொண்டது சந்திரிகா அரசு.
எதிர்கொண்ட எதையும் அள்ளிவிழுங்கியபடி
கண்டிவீதியேறி வந்தது.
புலிக்கதை முடிந்ததென்று சாக்குருவிகள் பாடின.
வன்னிக்குள் அழந்தது வரிப்புலிச்சேனையென்று
களிப்புற்றனர் கால்கழுவிகள்.
கிடைத்தளவில் மகிழ்வுற்று
அடிவருடிகள் அரசேறக் காத்திருந்தனர்.
பல்லுப்பிடிங்கிய பாம்புகள்கூடப் படமெடுத்தாடின.
புலிகள் தோற்றுப்போவார்களென்ற பெருநம்பிக்கையில்
தேர்தல்நடிகர்கள் அரிதாரம் பூசிக்கொண்டு
குடாநாட்டில் குடியேறினர்.
ஜயசிக்குறுய் ஜெயிக்குமென்பதில்
நம்பிக்கை வைத்துத்தான் இந்தளவும் நடந்தன.
பொன்விழா கண்டிக்குப் போன கதையும் இதுதான்.
13.05.1997 அன்று
விகாராதிபதி எடுத்துக்கொடுத்த விசேட நாளில்,
தரணியாளவல்ல பரணிநட்சத்திரத்தில்,
மேடராசியில்,
உதயகால உத்தம நேரத்தில்,
மந்திரித்துக் கட்டிய மஞ்சள் நூலுடன்
"வெற்றிநிச்சயம்" வீதியில் இறங்கியது.
பத்துநாட்களில்
ஆகப் பத்தே நாட்களில்
கண்டிவீதி என்காலில் விழுமென
கைத்தடி காலக்கெடு விதித்தது.
சமாதானத்துக்கான சண்டையென்றது
பொதிசுமக்கும் பெரியகண்ணாடி.
நள்ளிரவு விருந்துமுடிந்து நாடுதிரும்பிய
"அவ்வைசண்முகிக்கு" ஆனந்தபரவசம்.
குடாநாட்டு மக்களுக்கான "சிலுவைச்சுமப்பு" என
சக்கரவர்த்தினியின் தங்கவாய்திறந்தது.
வெற்றிநிச்சயத்துக்கு விளக்கம் சொன்னது.
தடல் புடலாகத் தம்பட்டம் அடித்தபடி
சிக்குறுய் சீறிப்பாய்ந்தது.
புலிகளினித் தப்பமுடியாதென்றே பேசப்பட்டது.
"போஸ்ற்மோட்டம்" செய்யும் ஆய்வாளர்கள் கூட
புலிக்கதையை முடித்துப் புதியகதை தொடங்கினர்.
ஓமந்தைவரை ஏவற்பேய்கள் எக்காளமிட்டன.
புலியழித்து நகருகிறோம் என்றபெருமிதம்.
கண்டிவீதியின் வரைபடத்தைக் கையில் வைத்துக்கொண்டு
உயிர்நிலை எட்டும் தூரத்திற்கு வரும்வரை
காத்திருந்தான் தலைவன்.
கட்டளைக்குக் காத்திருந்தனர் புலிகள்.
பாதித்தூரம் கடந்ததும்
"வெற்றியினி உங்கள்பக்கம் விளையாடுங்கள்" என்று
கட்டளைபிறந்தது.
பதுங்கியிருந்த வேங்கைகள் பாயத்தொடங்கினர்.
முகத்திலொன்று,
முதுகிலொன்று,



கையிலொன்று,
காலிலொன்றென விழுந்தது புலியினடி.
சிக்குறுய் சிதறிச் சிலும்பியது.
முன்னே போனால் முகத்துக்கடி.
பின்னே போனால் முதுகுக்கு அடி.
மூஞ்சூறை விழுங்கிய சாரைப்பாம்பாய்
முக்கிக்கொண்டு கிடக்கிறது ஜயசிக்குறுய்.
பிரபாகரன்:
அடியும் முடியும் அறியமுடியாத அதிசயம்.
புலிகள்:
வேரையும் விழுதையும் இனம்காணமுடியாத விருட்சம்.
எவனெவன் எந்தமொழியிற் கேள்வி கேட்பானோ
அவனவனுக்கு அந்தமொழியிற் பதில் சொல்பவர்களே
புலிகள்.
"பாரடா தமிழரின் பாதைமீதேறி-யாழ்ப்
பாணம் போவேனென்ற ஜயசிக்குறுய்.
பன்னிரண்டானது மாதங்கள் ஆயினும்
பல்லிளிக்கின்றது ஜயசிக்குறுய்."

ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை ஓராண்டு பூர்த்தியானதையிட்டு 'விடுதலைப் புலிகள்' மே மாத இதழில் வெளியான கவிதை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்